பக்கங்கள் எட்டு
விலை ரூபா: 5.00

# வலம்புரி
VALAMPURI

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 கார்த்திகை 12 திங்கட்கிழமை (27-11-2000) தொ. பேசி 3378 ஒலி: 343

லாலா சோப்
சன்சயின் சோப்
விநியோகஸ்தர்
சண்முகன்
வர்த்தக நிலையம்
குளப்பிட்டிச் சந்தி,
கொக்குவில்.
லாலாசோப் அச்சுவேலி
(கி 1045)

★ ஓயாத அலைகள் மூலம் மீட்கப்பட்ட

# தமிழர் தாயகத்தில் "நினைவுக் கல்" நேற்று நாட்டிவைக்கப்பட்டது!

## மக்கள் மலர்தூவி அஞ்சலி செய்தனர்

(வவுனியா விசேட நிருபர்)

ஓயாத அலைகள் நடவடிக்கைமூலம் மீட்கப்பட்ட முக்கிய தமிழ் பிரதேசங்களில் நேற்று வெற்றி நினைவுக்கல் நாட்டும் வைபவங்கள் நடைபெற்றுள்ளதாக புலிகளின் குரல் வானொலி அறிவித்துள்ளது.

மாவீரர்தின நிகழ்வுகளின் ஓர் அங்கமாக இடம்பெற்ற இந் நிகழ்வின்போது ஒட்டுசுட்டான், ஆனையிறவு, மாங்குளம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் நினைவுக்கற்கள் நாட்டப்பட்டு திரை நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மதிநுட்பத்தினாலும் தலைசிறந்த திட்டங்களினாலும், வெற்றிகரமாக இடம்பெற்று வரும் ஓயாதஅலைகள் நடவடிக்கைகள் மூலம் மீட்கப்பட்ட தமிழ்ப் பிரதேசத்தின் முக்கிய இடங்களில் கருங்கல்லில் செதுக்கப்பட்ட நினைவுக்கற்கள் நாட்டப்பட்டு திரைநீக்கம் செய்யப்பட்டுள்ளன.

மாவீரர் தினத்தை ஒட்டிய இரண்டாவதுஎழுச்சி நாள் ஆன நேற்று திரைநீக்கம்செய்யப்பட்ட இந் நினைவுக் கற்களுக்கு மக்கள் பெருமளவில் சென்று மலர்களை தூவியும்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## இன்று மாவீரர்தினம் அனுஷ்டிக்கப்படுகிறது

(வவுனியா)

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மரணித்த போராளிகளை நினைவு கூரும் ''மாவீரர்'' தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது.

வன்னி, மட்டகளப்பு ஆகிய பகுதிகளின் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் இந்நிகழ்வு உணர்வு பூர்வமாகக் கொண்டாடப்படுகிறது.

[8ம் பக்கம் பார்க்க]

## செய்மதி மூலமாக பிரபாகரனின் உரை

(வவுனியா)

இன்று இடம் பெறவுள்ள மாவீரர் தின நிகழ்வுகளையும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் மாவீரர் தின உரையையும் ஒலிபரப்புவதற்காக புலிகளின் குரல் வானொலி இன்று பி. ப 4மணி தொடக்கம் இரவு 9.15 மணிவரை (பழையநேரம்) தொடர்ச்சியாக நீடித்திருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலிகளின் குரல் வானொலி ஒலிபரப்பை சிற்றலை வரிசையிலும் எவ். எம் இலும் கேட்கலாம். இதேவேளை ஐரோப்பிய நாடுகளில் வாழுகின்ற தமிழ் மக்கள் தமிழ் வானொலி மூலம் வன்னியில் இடம்பெறும் மாவீரர் தின நிகழ்வுகளையும் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் உரையையும் கேட்கமுடியும்.

இவற்றை செய்மதி மூலம் ஒலிபரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம)

## ஒருவர் காயம்

(வவுனியா)

செட்டிகுளம் பொலிஸ் பிரிவில் உள்ள நேரியகுளம் மாதா சிலைப்பகுதியில் ரோந்து சென்ற இராணுவத்னர் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இராணுவ வீரர் ஒருவர் காய

(8ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளவத்தையில் 42. தமிழர்கள் கைது

(கொழும்பு)

இன்று இடம்பெறவுள்ள மாவீரர் தினத்தை ஒட்டி கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியில் இராணுவத்தினரும் பொலிஸாரும் மேற்கொண்ட திடீர் தேடுதல் நடவடிக்கையின போது 42 தமிழ் இளைஞர் யுவதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்

நேற்று அதிகாலை 4 மணி முதல் 7 மணி வரை இத் தேடுதல் நடவடிக்கை நடைபெற்றது. இதன்போது வெள்ளவத்தைப் பகுதியில் பெரேரா வீதி உட்பட பல இடங்களில் உள்ள விடுதிகள் வீடுகளில் தங்கி இருந்த அனைவரும் விசாரணைக்கு உட்படுத்திய பின்பே 42 பேரையும் வெள்ளவத்தைப் பொலிஸார் கைது செய்துள்ளார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க அமைச்சரின் வரவையும் சிஹல உறுமய கட்சி எதிர்க்கும்!

### செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இனவாத அரசியல் கட்சிக

அமைச்சர் தமிழ் கட்சி எம்பிக்கள் மற்றும் அரசியல் தலைவர்களுடன் பேச்சு

## 'லங்கா முடித்த' கப்பல்

## 'லங்கா முடித்த' கப்பல் பயண சேவை நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து திருமலைக்கான ''லங்கா முடித்த'' பயணிகள் கப்பல் சேவை நாளை செவ்வாய்க்கிழமை திட்டமிட்டபடி இடம்பெறவுள்ளது. இந்தச் சேவையில் ஆயிரத்து 250 பயணிகள் அழைத்துச்செல்லப்படவுள்ளதாக யாழ். சிவில் நிர்வாக காரியாலயம் அறிவித்துள்ளது.

இக்கப்பலில் பயணம்செய்யும் பயணிகளுக்கான பயணச் சீட்டுகள் இன்றும்,

→ 8ஆம் பக்கம் பார்க்க

## ரெலோ எம்.பி செல்வம் பிரதமருடன் சந்திப்பு

(கொழும்பு)

பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவை ரெலோ அமைப்பின் தலைவரும், வன்னிமாவட்ட எம்.பியுமான செல்வம் அடைக்கலநாதன் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசியுள்ளார்.

இப்பேச்சின் பேது ரெலோ அமைப்பைச் சேர்ந்த அரியூசுப், பிரசன்னமாகி இருந்தார்.

இப்பேச்சின் போது வன்னிக்குச் செல்பவர்கள பத்தாயிரம் ரூபாவை மட்டுமே எடுத்துச் செல்லக் கூடியதாக இருப்பதாகவும், இத்தொகையை அதிகரிக்க வேண்டும் என்றும்;

மன்னாரில் இருந்து தலை

→ 8ஆம் பக்கம் பார்க்க

## விமான சேவை

(யாழ்ப்பாணம்)

பலாலிக்கும் இரத்மலானைக்கும் இடையில் இன்று திங்கட்கிழமை ஒரு விமான சேவை மட்டும் இடம் பெறுமென யாழ் சிவில் நிர்வாக காரியாலயம் அறிவித்துள்ளது.

(8ஆம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

இலங்கையின் உள்நாட்டுவிவகாரத்தில் எந்த வொருநாடு தலையிட்டாலும் நாங்கள் எதிப்புத் தெரிவிக்க பின் நிற்கப் போவதில்லை.

இனவாத அரசியல் கட்சிகளில் ஒன்றான ''சிஹல உறுமய''வின் பொதுச் செயலாளர் திலக்கருணாரத்தின இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இன்று திங்கட்கிழமை அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கார்ல் இன்டர்பேர்த் கொழும்பு வரவுள்ளார். இவரது வருகை சமாதானத்தை ஏற்படுத்துவதை நோக்காக இருந்தால் நோர்வேயின் விஷேட தூதுவர் எரிக்சோல் ஹைய்முக்கும், பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் பீற்றர் ஹெயினுக்கும் எதிர்ப்புத் தெரிவித்தது போன்று இவருக்கும் எதிர்ப்புத் தெரிவிப்போம்.

அமெரிக்க இராஜாங்க

தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதை நாம் அறிவோம்.

இவர் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடாமல் இருப்பாராயின் இதனை நாம் பெரிதும் விரும்புகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

(ஸ்ரீ)

## பிரபாவின் உரை

(வவுனியா)

சர்வதேசசமூகமும், தலைவர்களும் மிகவும் உன்னிப்பாகவும் ஆர்வத்துடனும்எதிர்பார்த்துள்ள11வதுமாவீரர்தின உரையைதமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இன்றுமாலை6.08க்கு (பழைய நேரம்) புலிகளின்வானொலிமூலம் நிகழ்த்தவுள்ளார்

இந்த உரையின் போது இலங்கை அரசுடனான சமாதானப் பேச்சுக்கள் தொடர்பான சில சமிக்கைகளை வெளியிடுவார் என எதிர்பார்க்கப் படுகிறது' (ம

## பஸ்ஸில் குண்டு

(சிலாபம்)

சிலாபம்பகுதியில் சக்தி வாய்ந்த குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

சிலாபத்தில் இருந்து நீர்கொழும்பு செல்லும் பஸ்

(8ஆம் பக்கம் பார்க்க)

## 10ந் திகதிமுதல் பிரதமர் அலரிமாளிகையில்

(கொழும்பு)

பிரதமர்ரட்ணசிறிவிக்கிரமநாயக்கா அடுத்த மாதம் 10ம் திகதி உத்தியோக பூர்வ வாசஸ்தலமான அலரிமாளிகையில் குடிபுக உள்ளார்.

அதற்குமுன்னதாக 9ம் திகதி விசேட பிரித் ஓதும் வைபவத்திற்குப் பிரதமர் ஏற்பாடு செய்துள்ளார்

இதேவேளை ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கா அலரிமாளிகையில் இருந்து வெளியேறி ஜனாதிபதி மாளிகையில் குடியேறியிருப்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## சாவகச்சேரி நகரசபை ஊழியரின் கோவைகள் மீட்கப்படவில்லை

(தென்மராட்சி)

சாவகச்சேரி நகரசபையில் பணியாற்றுகின்ற நூற்றுக்கு மேற்பட்ட ஊழியர்களின் தனியார் கோவைகள் சாவகச்சேரி நகரசபைக் கட்டடத்தில் இருந்து மீட்க முடியாமல் இருப்பதால் திருகோணமலையிலுள்ள வட கிழக்கு மாகாண சபையின் உளூராட்சித் திணைகளத்தில இருக்கும் கோவைகளில் இருந்து ஊழியர்களின் விபரங்களின் பிரதிகளை போட்டோப் பிரதிகளாக எடுத்துக் கொள்வது என நேற்று முன்தினம் நெல்லியடியில் நடைபெற்ற சாவகச்சேரி நகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

நகரசபையின் தலைவர் பெ. தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திற்கு ஏழு உறுப்பினர்கள் சமுகமளித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் இக் கூட்டத்தில் சாவகச்சேரி நகரசபைக்கான 2001 ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டமும் சமர்ப்பிக்கப்பட்டு, திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 77

## ஏ.ரி.ஐ மாணவர் போராட்டம்

(கொழும்பு)

உயர் தொழில் நுட்ப நிறுவனத்தின் (ஏ.ரி ஐ) நிர்வாகப் பொறுப்புகள் உயர்கல்வி அமைச்சிலிருந்து கல்வி அமைச்சுக்கு மாற்றப்பட்டுள்ளது.

இதனை ஆட்சேபித்து மேற்படி நிறுவன மாணவர் ஒன்றியம் கொழும்பில் சத்தியாக்கிரக போராட்டத்தை ஆரம்பித்துள்ளது. (இ-5)

## ஈச்சமோட்டைப் பகுதியில் தொடரும் திருட்டுக்கள் பெண்களுக்கும் தொடபு

ஈச்சமோட்டைப் பகுதிகளில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் திருட்டுச் சம்பவங்களுடன் பெண்களும் தொடர்புபட்டுள்ளமை ஊர்ஜிதமாகியிருப்பதாக நம்பகமானவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இப்பகுதிகளில்பகல் வேளையில் இடம்பெறும் துணிகர திருட்டுக்கள் விழிப்புக்குழுக்களின் அபராதமுயற்சியினால் முறியடிக்கப்பட்டு வருகின்ற போதிலும் நாட்டு சூழ்நிலை இரவுத்திருடர்களை மடக்கிப் பிடிப்பதற்கு ஏதுவாக அமையவில்லைஎனக் கூறப்படுகிறது.

எனினும் இச்கள்வர்களின் கொட்டம் மடக்கி, ஏற்ற சட்ட நடவடிக்கை எடுக்க விழிப்புக்குழுக்கள் தயாராகி வருவதும் குறிப்பிடத்தக்கது.

இதேசமயம், அண்மையில் ஒரு இரவில் மட்டும் பழைய கூட்டுறவுச்சங்க ஒழுங்கையில் மூன்று வீடுகளிலும், ஈச்சமோட்டை பாற்குளம் ஒழுங்கையில் இரு வீடுகளிலும்கள்வர்தம்கைவரிசையைகாட்டிச் சென்றுள்ளனர். (உ11-0)

## சுவரொட்டிகள்

மாவீரர் வாரத்தை ஒட்டிய விடுதலைப் புலிகளின் சுவரொட்டிகள் கரவெட்டி, நெல்லியடிப்பகுதிகளில் பரவலாக காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சுவரொட்டியின் அடியில் அரசியல்துறை, வடமராட்சி என்ற வசனமும் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க-43)

## கல்விப்பணிப்பாளருக்கு 'பிக்கப்' வாகனம்

யாழ்ப்பாணம் மேலதிக மாகாணகல்விப் பணிமனைக்கு புதிதாக ஒரு பிககப் வாசனம் நேற்றுமுன்தினம் திருகோணமலையிலிருந்து எடுத்துவரப்பட்டுள்ளது.

இதன்மூலம் மேற்படி பணிமனையின் பணிகள் துரிதப் படுத்தப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை யாழ். குடாநாட்டுக்கான இலவசப் பாடநூல்கள் பெரும்பாலும் அடுத்தவாரம் எடுத்துவர ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக மேலதிக மாகாணப் பணிப்பாளர் ந. தணிகாசலம்பிள்ளை தெரிவித்தார். (க-3)

## யாழ்.மாவட்ட 1,ஏ,பி பாடசாலைகளுக்கு 40 இலட்சம் நிதி ஒதுக்கீடு

இரண்டாயிரமாம் ஆண்டு வேலைத்திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்திலுள்ள 1ஏ.பி பாடசாலைகளுக்கான உபகரணங்கள் மற்றும் கற்பிக்கும் உதவிகளுக்காக ரூபா 40 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்தொகை யாழ். மாவட்டத்திலுள்ள 5 வலயங்களுக்கும், வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி கலாசார, விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் பரமேஸ்வரனால் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், யாழ்ப்பாண வலயத்தைச் சேர்ந்த 09 பாடசாலைகளுக்கென ரூபா 7 இலட்சத்து 50 ஆயிரமும், வலிகாமம் வலயத்தைச் சேர்ந்த 18 பாடசாலைகளுக்கென 10 இலட்சமும் வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 9 பாடசாலைகளுக்கென 10 இலட்சமும், தென்மராட்சி கல்வி வலயத்தைச்சேர்ந்த 4 பாடசாலைகளுக்கென 7 இலட்சத்து 50 ஆயிரமும், தீவக கல்வி வலயத்தைச் சேர்ந்த 4 பாடசாலைகளுக்கென 5 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விபரங்கள் யாழ் மாவட்ட அரச அதிபர் கே. சண்முகநாதனால் நான் தவிசாளருக்கும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். தவராசாவுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன


## முக்கிய அறிவித்தல்

**நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலை கைதடி**

கைதடி நவீல்ட் பாடசாலை யா/பரி யோவான் கல்லூரிக்கு முன்பாக அமைந்துள்ள பரி யோவான் அக்கடமியில் தற்காலிகமாக இயங்கி வருகின்றது. இன்று வரை பாடசாலைக்குச் சமுகமளிக்காத பிள்ளைகளின் தாய் அல்லது தந்தை அல்லது பாதுகாவலர் பிள்ளையுடன் 29-11-2000 புதன்கிழமை காலை 9.30 மணிக்குத் தவறாது சமுகம் தரவும் பிள்ளை பாடசாலைக்குச் சமுகமளிப்பதில் உள்ள இடர்பாடுகள் பற்றி அன்று கலந்துரையாடி முக்கிய முடிவுகள் மேற்கொள்ளப் படும். எனவே தவறாது சமுகம் அளிப்பது பிள்ளையின் கல்வி வளர்ச்சிக்கு பெரிதும் உதவியாக அமையும்.

அதிபர்
நவீல்ட் பாடசாலை

யா/பரி. யோவான் அக்கடமி,
யாழ்ப்பாணம். (கி-1060)



## இறுதி அறிவித்தல்

**யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான கடைகளின் குத்தகை உரிமையை புதுப்பித்தல்**

யாழ்ப்பாண மாநகர சபைக்கு சொந்தமான கடைகளின் வாடகை உரிமையாளர்கள் தத்தமது கடைகளின் குத்தகை உரிமையை 28-02-2001 ம் திகதிக்கு முன்பாக புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

28-02-2001 ம் திகதிக்கு முன்னர் குத்தகை உரிமையை புதுப்பித்துக் கொள்ளாத கடைகள் மீளக் கேள்வி கோர நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்பதையும் அறியத் தருகின்றேன்.

மேலும் இக்கடைகள் தொடர்பாக ஏதாவது பிணக்குகள் இருப்பின் 28-02-2001 ம் திகதிக்கு முன்பு எமக்கு எழுத்து மூலம் அறியத் தருமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

மாநகர சபை, இராசா தணிகாசலம்
யாழ்ப்பாணம். மாநகர பதில் ஆணையாளர்.
24-11-2000 (கி-1061)



## வலி. கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி 2000-ம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

1. கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி: 06-12-2000 நண்பகல் 12.00மணிவரை
2. கேள்விப் பத்திரம் ஏற்றுககொள்ளும் திகதி: 07-12-2000 நண்பகல் 12.00 மணி வரை
3. கேள்விப் பத்திரம் திறக்சப்படும் திகதி: 07-12-2000 பி ப 2 00 மணிவரை
4. கேள்விப் பத்திரங்களை அந்தந்த உப அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
5. மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

கேள்விப் படிவங்கள் இணைப்பிரதியில் தயாரித்து மூலப் பிரதியைஇவ் அலுவலக கேள்விப் பெட்டியிலும் இணைப்பிரதியைப் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர், இல 29, செட்டித்தெரு, நல்லூர் என்ற முகவரிக்கும் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

| குத்தகை விபரம் | கேள்வி பத்திரப் பணம் | கேள்வி வைப்பு | ஆகக்குறைந்த தொகை |
|---|---|---|---|
| **அச்சுவேலி உப அலுவலகம்** | | | |
| 1. வளலாய் தம்பாலை பொதுச் சந்தை | 50/- | 100/- | 550.00 |
| 2. அச்சுவேலி பொதுச் சந்தை துவிச்சக்கர வண்டி தரிப்பிடம் உட்பட | 500/- | 5000/- | 728200.00 |
| **புத்தூர் உப அலுவலகம்** | | | |
| 1. ஆவரங்கால் மரக்கறிச் சந்தை | 50/- | 100/- | 1375.00 |
| 2. ஆவரங்கால் மீன் சந்தை | 25/- | 50/- | 350.00 |
| **நீர்வேலி உப அலுவலகம்** | | | |
| 1. நீர்வேலி வடக்கு மீன சந்தை | 100/- | 150/- | 3500.00 |
| 2. நீர்வேலி ஆட்டிறைச்சிக்கடை | 50/- | 150/- | 1200.00 |
| 3. நீர்வேலி மாட்டிறைச்சிக்கடை | 250/- | 1000/- | 11500.00 |
| **கோப்பாய் உப அலுவலகம்** | | | |
| 1. இருபாலைசந்தை மாட்டிறைச்சிக்கடை | 300/- | 2500 – | 73150.00 |
| 2. இருபாலை மீன் சந்தை | 50/- | 150/- | 1870.00 |
| 3. இருபாலை சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 100/- | 150/- | 2475.00 |
| 4 கோப்பாய் வடக்குஆட்டிறைச்சிக்கடை | 100/- | 150/- | 2475.00 |
| **உரும்பிராய் உப அலுவலகம்** | | | |
| 1. ஊரெழு ஆட்டிறைச்சிக்கடை | 100/- | 250/- | 4000.00 |

பூ. குணசிங்கம் (ஜே. பி. யு. எம்)
தவிசாளர்

வலி கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி.
24-11-2000 (கி,1062)



## பிரிவுத்துயர் பகிர்வு

**பேரம்பலம் சிவகுமாரன்**

சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும் பிரான்சில் வசித்தவருமான பேரம்பலம் சிவகுமாரன் (சிவா) 24 ஆம் திகதி காலமானார்.

இறுதிக்கிரியைகள் பிரான்சில் நடைபெறும்.

தகவல்: நா. லோக நாதன் (மாமன்)

**திருமதி சிவலிங்கம் கமலாதேவி**

ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் பிரான்சில் வசித்தவருமான சிவலிங்கம் கமலாதேவி 24. 11. 2000 அன்று காலமானார்.

இறுதிக்கிரியைகள் பிரான்சில் நடைபெறும்.

தகவல்: க. பொன்ராசா

**திருமதி சின்னையா தங்கம்மா**

ஆவரங்காலைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னையா தங்கம்மா 20. 11. 2000 அன்று காலமானார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் நேற்று நடைபெற்றன.

தகவல்: க. சின்னையா (கணவன்)

**ஐயாத்துரை கதிர்காமலிங்கம்**
(ஓய்வு பெற்ற ஆசிரியர்).

நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட ஐயாத்துரை கதிர்காமலிங்கம் நேற்று கொக்குவிலில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: செல்வி. க. கமலநாயகி (மகள்)

# பாடசாலைக் கேற்றை, திறக்க முற்பட்ட அதிபரை மின்சாரம் தாக்கியது

(கொழும்பு)

பாடசாலைக் கேற்றைத் திறக்க முற்பட்ட அதிபர், மின்சார தாக்குதலுக்கு உள்ளாகி தூக்கி வீசப்பட்டார்.

வவுனியா தாண்டிக்குள பிரமன் வித்தியாலயத்தில் அண்மையில் நடந்த இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது;

பிரஸ்தாப பாடசாலைஅதிபர், வழமை போன்று சம்பவ தினம் பாடசாலையின் கேற்றைத் திறக்க முற்பட்டார்.

எதிர்பாராத விதமாகமின்சாரத் தாக்குதலுக்கு இலக்காகி தூக்கி வீசப்பட்டபோதிலும் தெய்வாதீனமாக உயிருக்கு ஊறு நேரவில்லை.

பாடசாலையின் வளவு வேலியிலும், கேற்றிலும் பாய்ச்சப்பட்டிருந்த மின்சாரமே இவரைத்தாக்கியதாக பின்னர் தெரியவந்துள்ளது.

இதேவேளை,

இப்பாடசாலைக்கு அருகில் இராணுவத்தினர் காவலரண் அமைத்து கடமையில் ஈடுபட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (உ-இ)

# கையில் கற்பூரம் கொளுத்திய குடும்பப் பெண் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

காணாமற் போனதாக கருதப்படும் கணவன் பற்றிய தகவலறிந்து, கையில் கற்பூரம் கொளுத்திய குடும்பப்பெண் ஒருவர் யாழ். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் பற்றி அறிய முடிந்ததாவது,

கடந்த வருடம் தனங்கிளப்புபகுதியில் காணாமல் போன தன் கணவன் மீண்டும் வந்தால், கையில் கற்பூரம் கொளுத்தி இறைதரிசனம் செய்வதாக மனைவி நேர்த்திக்கடன் செய்திருந்தார்.

ஒன்றரை வருட இடைவெளியின் பின் இம்மாதம் காணாமல் போன கணவர் களுத்துறைச் சிறையில் இருப்பதாக உறவினர்மூலம் தகவல் கிடைத்ததையடுத்து தனது நேர்த்திக்கடனைச் செய்து முடித்தார்.

இதனால் கையில் ஏற்பட்ட காயத்துக்கு சிகிச்சை பெறும் வகையிலேயே தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (உ 12)

## பட்டப் பகலில்

# திருடிய சைக்கிளை படையினர் மீட்டனர்

(சுண்டுக்குளி)

பட்டப்பகலில் திருடப்பட்ட பெண்களுக்கான துவிச்சக்கரவண்டி, படையினரின் உதவியுடன் மீட்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை பிற்பகல், சுண்டுக்குளி பஸ்தியான் சந்திக்கண்மையில் நடந்தேறிய இப் பகல் திருட்டுப்பற்றிதெரியவருவதாவது.

தேங்காய்கள் கட்டிக்கொண்டு இப்பகுதிக்கு வந்த இளம்பெண் ஒருவர், மேற்படி சந்திக்கண்மையிலுள்ள வீடொன்றின் முன்பாக அதனை நிறுத்திவிட்டு வீட்டினுள் சென்று வந்து பார்த்தபோது துவிச்சக்கர வண்டி மாயமாய் மறைந்திருந்தது.

அதிர்ச்சியடைந்த அப்பெண் அயலில் காணப்பட்ட அனைவரிடமும் துவிச்சக்கர வண்டிதொடர்பாகவின விய போது ஒருவரும் தாம் காணவில்லை என கைவிரித்துவிட்டனர்.

இருப்பினும், அருகில் இருந்த மோட்டார் சைக்கிள் திருத்துபவர் மீது சந்தேகம் எழவே, அப்பால் இருந்த படையினரிடம் விபரம் கூறப்பட்டதற்கிணங்க, சம்பந்தப்பட்ட நபரிடம் படையினர், 'விசாரிக்கும் முறையில் விசாரித்து' உண்மையை அறிந்து கொண்டனர்.

துவிச்சக்கர வண்டியை திருடிய அந்நபர், தனது மகனிடம் அதனை ஒப்படைத்ததாக கூறவே அவர் மகன் வசமிருந்து அது மீட்கப்பட்டு உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டது. (உ-110)

# சிறுவர் அபிவிருத்திக் குழு அங்குரார்ப்பணம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட ஜே - 01, ஜே - 02 கிராம அலுவலர் பிரிவுக்கான சிறுவர் அபிவிருத்திக்குழு அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

சிறுவர் உரிமை மீறல், வறுமையின் நிமித்தம் சிறுவர்களின் கல்வி தடைப்படுதல், சிறுவர்கள் போதைப்பொருட்களுக்கு அடிமையாகுதல் ஆகியவற்றை தடுத்து. அவர்களின் உரிமையோடான வாழ்க்கையை நிலைப்படுத்துவதற்காக நெடுந்தீவுக்குட்பட்ட சகல கிராம அலுவலர் பிரிவுகளிலும் இக் குழு அமைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது: (உ-82)

## வட்டார அடிப்படையில்

# உள்ளூராட்சி தேர்தல்கள் அமைச்சர்குழு ஆராய்வு

நடத்தப்படவுள்ள உள்ளூராட்சித் தேர்தலை வட்டார முறையில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் அமைச்சர்கள் அடங்கிய குழுவொன்று வட்டார முறையில் தேர்தல்கள் நடத்துவது தொடர்பாக ஆராய்ந்து வருவதாகவும், இது குறித்து தேர்தல் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

அத்துடன், கடந்த காலங்களில் வட்டார முறைப்படி நடத்தப்பட்ட சகல உள்ளூராட்சி தேர்தல் விபரங்களையும் இக்குழு ஆராய்ந்து வருகிறது.

இதேவேளை, 1976 ஆம் ஆண்டிலேயே இறுதியாக இலங்கையில் உள்ளூராட்சித் தேர்தல்கள் வட்டார அடிப்படையில் நடத்தப்பட்டமையும், அதன் பின் விகிதாசார பிரதிநிதித்துவ முறை நடைமுறைப்படுத்தப்பட்டமையும் தெரிந்ததே. (உ)

# கருத்தரங்கு

[அரியாலை]

ஜேர்மன் தொழில்நுட்ப கூட்டுத்தாபனத்தின் [G T Z] அனுசரணையுடன் வடக்கு-கிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சு செயற்படுத்தும் ஆரம்பக் கல்விப் பிள்ளைகளின் மகிழ்ச்சிகரமான கற்றல் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்றும் நாளையும் [ வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் இடம்பெற உள்ளது.

மேற்படி கருத்தரங்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி யா/இராமநாதன் கல்லூரியிலும் இடம்பெறவுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-106)

# இராசி பலன்

27 11-2000

(கார்த்திகை 12, திங்கள்)

துதியை

கேட்டை மு.இ 7.45

ராகுகாலம் - 7 43 - 9.13

சுபநேரம்- 12. 13-1.43

**மேடம்**
மனஸ்தாபம், எதிரிகளால் தொல்லை, காரியத்தடை, சிறுவியாதி.

**இடபம்**
பிரயாணம், விருந்துபசாரம், தனவரவு, எதிர்பாராத கலகம்.

**மிதுனம்**
முயற்சி பலிதம், மகிழ்ச்சியான சம்பவம், பகைவர் விலகுவர், தனவரவு.

**கடகம்**
குழப்பமான மனநிலை, சொத்துக்களால் கவலை, ரோகம், காரிய ஜெயம்.

**சிங்கம்**
தாய்வழி உறவினர் தொடர்பு, கல்விச் சிறப்பு, நம்பிக்கைக் குறைவு, வயிற்று வலி

**கன்னி**
நினைத்த காரியம் கைகூடும், சகோதரர் உதவி, பிரயாணம், தனவரவு

**துலாம்**
வாக்குக் கலகம், காரியத் தடை, மனஸ்தாபம், தனவிரயம்.

**விருச்சிகம்**
சயனசுகம், புதிய சிந்தை, தனவரவு, பிரயாணம்.

**தனுசு**
பணச் செலவு, நித்திரைக் குறைவு, பிரயாண அலைச்சல், காரியத் தாமதம்.

**மகரம்**
தனலாபம் கீர்த்தி. குடும்ப சுகம், நன்மை விருத்தி.

**கும்பம்**
தொழில் மேன்மை, காரிய ஜெயம், அதிகாரிகள் சந்திப்பு தனவரவு.

**மீனம்**
பிரயாணம், நிலைமாற்றம், தந்தை வழி உறவு. முயற்சி மந்தம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## மட்டுவில் பன்றித் தலைச்சி

# அம்மன் கோவிலிலிருந்து மேலும் ஒரு தொகுதி பொருட்கள் மீட்பு

(தென்மராட்சி)

சாவகச்சேரியிலுள்ள மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சி அம்மன் கோவிலில் இருந்து மேலும் ஒரு தொகுதி பொருட்கள் அண்மையில் மீட்டு எடுத்துவரப்பட்டுள்ளது.

இவற்றுள் கோவிலிற்கான இடபவாகனம், அர்ச்சனை செய்வதற்குப் பாவிக்கப்படும் உபகரணங்களும் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நெல்லும் அடங்கியுள்ளன என இக்கோவிலின் தர்மகர்த்தா சபைத் தலைவர் சி. சிவகுரு தெரிவித்தார்.

இப்பொருட்களை மீட்டெடுத்துவருவதில் 521 வது படையணியின் கேணல் ரத்நாயக்கா, மேஜர் ஜெயசேகரா, மேஜர் வர்ணகுலசூரியாவும் வேண்டிய ஒத்துழைப்புகளை வழங்கியிருந்தனர் எனத் தெரியவருகின்றது.

மேலும் உசன கந்தசாமி கோவிலின் பிரதமகுருக்களான எஸ். கேதீஸ்வரக் குருக்களின் முயற்சியினாலேயே இவ் ஆலயத்தின் பொருட்கள், நகைகள் மற்றும் ரொக்கப்பணம் போன்றவை மீட்கப்பட்டனஎனவும் அறிவிக்கப்படுகின்றது.

கோவில் பெரிய அளவில் சேதமாக்கப்படவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

மேற்படி ஆலயத்திலிருந்து ஏற்கனவே ஒரு தொகுதி பொருட்கள் மீட்டுவரப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-77)

# பிரதேசசெயலர்பிரிவுரீதியாக பகுதிநேர தகவலாளர் விரைவில் நியமனமாவர்

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பிரதேச செயலர்பிரிவுகளில் வாழ்கின்ற மக்களுடைய எத்தனையோ பிரச்சினைகளும், கஷ்டங்களும் வெளிக்கொண்டு வரப்படவில்லை. இதனை நீக்கஉதவும் முயற்சியில் ஒரு கட்டமாக யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் பிரதேச செயலர் பிரிவுகள் தோறும் பகுதிநேர தகவலாளர்களை விரைவில் நியமிக்கவுள்ளதாகத் தெரியவருகின்றது.

அதன்மூலம் பிரதேச செயலர் பிரிவுகளில் வாழ்கின்ற மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகள், மற்றும் தேவைகளை மாதந்தோறும் திரட்டி அவற்றினை தொகுத்து யாழ்ப்பாணத்தில் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு நிதியுதவியை வழங்குகின்ற நிதி ஸ்தாபனங்களுக்கும் அறக் கொடையாளர்களுக்கும் வழங்கும் என இணையத்தின் முக்கிய பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி மேலும் அறியப்படுவதாவது; இதுவரை காலமும் இவ்வாறான தகவல்களையும், புள்ளிவிபரங்களையும் திரட்டும் பணியில் அவ்வப்பகுதிகளில் இயங்கிய அங்கத்துவ அரச சார்பற்ற நிறுவனங்கள் செயற்பட்டன. ஆயினும் அவற்றிடம் இருந்து முழுமையான தகவல்களையும், தரவுகளையும் உரிய நேரங்களில் பெறமுடியாமல் போனமை பெரும் பின்னடைவாகத் தெரியவந்தது என அவரால் கூறப்பட்டது.

இத்தகைய நிலவரத்தினை நாம் மேற்கொள்ள முற்படும்போது, இங்கு அமுல்செய்யப்பட்ட செயல்திட்டங்களால் யாருக்கும் பயன் கிடைக்கவில்லை எனவும் இலக்கு குடும்பங்களின் வாழ்வுநிலையில் முன்னேற்றம் ஏற்படவில்லை என்பதையும் அழுத்திக் கூறிடமுடியும் எனக் குறிப்பிடப்பட்டது. (க-77)

# யாழ்.நகரின்பல வீதிகளில் படையினர்திடீர்சோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி உட்பட பல வீதிகளில் படையினர் நேற்று திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

வாகனங்களில் வந்திறங்கும் படையினரே இவ்வாறு சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனராம்.

விடுதலைப் புலிகளின் மாவீரர் வாரத்தையொட்டி யாழ். நகரில் ஏதும் அசம்பாவிதங்கள் இடம் பெறலாம்என்ற முன் ஏற்பாட்டு நடவடிக்கையாகவே படையினர் சோதனை இடம்பெற்றதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, வழமை போன்று பக்கள் நடமாட்டம் யாழ். நகரப் பகுதிகளில் காணப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-12)

# நான்கு அப்பாவி தமிழர் படுகொலை நஷ்டஈடு வழங்கவேண்டும்

## த.வி. கூட்டணி செயலர் வேண்டுகோள்

திருமலை குச்சவெளி கோபாலபுரம் பகுதியில் நான்கு அப்பாவிப் பொதுமக்கள் கடற்படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்காகி மரணமடைந்தமை தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலர் ஆர்.சம்பந்தன், பாதுகாப்பு அமைச்சின் செயலர் சந்திரானந்த டீசில்வாவிற்கு அவசர 'பக்ஸ்' செய்தி ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; கோபாலபுரத்தைச் சேர்ந்த விஜயராசா ஜெயகாந்தன், ஜீவானந்தன் பிரசாந்தன், ஜேம்ஸ் ஜெயப்பிரதாப் (மாணவன்) சின்னத்தம்பி விஜயகுமார் ஆகியோர் மீன் பிடிக்கச் சென்றபோதே இச்சம்பவம் நடைபெற்றதாகவும், அங்குள்ள மக்கள் பெரும் அச்சவுணர்வுடன் காணப்படுகின்றனர் எனவும் இதற்கான பாரபட்சமற்ற விசாரணையை மேற்கொண்டு சம்பந்தப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு நஷ்டஈடு வழங்கவேண்டும்.

இச்சம்பவத்தை அடுத்து அப்பகுதி கடற்றொழிலாளர் பலர் தொழிலிற்கு செல்ல அச்சம் கொண்டுள்ளதாகவும் அச் செய்தியில மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# விடுதலைப்புலிகள் தரப்பில் 15 பேர் உயிரிழப்பு

## - தகவல் நிலையம் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பகுதிகளில் நேற்று முன்தினம் இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற மோதல் சம்பவங்களில் விடுதலைப் புலிகள் தரப்பில் 15 பேர் பலியானதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

அரியாலை, நாகர்கோவில் பகுதிகளில் இடம்பெற்ற மோதல்களில் ஒன்பதுபேரும் பொன்னாறி, ஓமந்தை, வந்தாறுமூலையில் இடம்பெற்ற மோதல்களில் ஆறுபேரும் உயிரிழந்ததாக விசேட ஊடகத்தகவல் நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (இ)

# ஒரு வருடத்திற்கும் மேலாக பூட்டப்பட்ட நிலையில் நெடுந்தீவுப் பிள்ளையார்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மேற்கு சித்தி விநாயகர் ஆலயம், கடந்தஒரு மாத காலத்திற்கும் மேலாக பூஜை வழிபாடுகள் ஏதுமின்றி பூட்டிய நிலையில் காணப்படுகிறது.

விநாயகர் தேவஸ்தான நிர்வாகத்தினருக்கும் ஆலய பூசகருக்குமிடையே, வேதனம் வழங்குதல் தொடர்பாக எழுந்த பிணக்குகளே இதற்குக்காரணம் எனக் கூறப்படுகிறது.

நெடுந்தீவுப் பகுதியிலேயே மிகவும் பழமை வாய்ந்ததும் பிரசித்தி பெற்றதுமான இவ்வாலயம் பூட்டிக்கிடப்பது அப்பகுதி மக்களின் ஆன்ம ஈடேற்றத்திற்கு பெரும் தடையாய் அமைவதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, அன்பையும் அருளையும், பண்பையும்-பக்தியையும் வளர்க்கவேண்டிய ஆலயங்கள் பணத்தினால் பிளவுண்டு நிற்பது மிகுந்த மனவேதனையளிப்பதாய் இருப்பதாகவும் சமய வன்லாளர் பலரும் கருத்து வெளியிட்டுள்ளனர். (உ-82)

# குடும்பஸ்தரின் அடையாள அட்டை படையினரிடம்

(யாழ்ப்பாணம்)

பலாலியிலிருந்து இடம் பெயர்ந்து இருபாலையில் வசித்த குடும்பஸ்தர் ஒருவரின் தேசிய அடையாள அட்டை இராணுவத்தினரால் விசாரணைக்கென வாங்கிச் செல்லப்பட்டது.

ஜனார்த்தனன் (வயது 26 பலாலி-வசாவிளான்) என்பவரின் தேசிய அடையாள அட்டையே இராணுவத்தினரால் வாங்கிச்செல்லப்பட்டுள்ளது.

கடந்தவருடம் டிசம்பர் மாதம் பிரஸ்தாபநபர் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டவர்என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-12)

# மனித கௌரவமன்று இணைப்பாளர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி வடக்கு மீசாலையைச் சேர்ந்த விஜயராசா தயாபதி 15/3 டேவிற்றோட் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த றொக்சின் பேரிறோஸ், 42 துண்டி வீதி, கொழும்புத்துறை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வைரமுத்து மகலிங்கம் ஆகியோரை மனித கௌரவத்திற்கான மன்றம் யாழ்ப்பாணம் மணியம் கட்டடத்தில் இயங்கும் தனது செயலகத்திற்கு சமுகம் தரும்படி அதன் இணைப்பாளர் ஐ.சிவராஜா கேட்டுக்கொள்கிறார்.

அவர் இது தொடர்பாக மேலும்தெரிவிக்கையில்:

வடபகுதியில் இராணுவத்தால் கைதாகி காணாமல் போனதாகக் கருதப்படும் இராமலிங்கம் விஜயராசா, றொக்சின் கொன்சன்ரைன் ஜோய், வைரமுத்து முத்துலிங்கம் ஆகியோர் தொடர்பான ஆட்கொணர்வுமனு விரைவில் தாக்கல் செய்யப்படவுள்ளதாக மனித கௌரவத்திற்கான மன்ற இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (க)

# திருட்டுத் தேங்காய்கள் கரவெட்டியில் விற்பனை

(துன்னாலை)

தென்மராட்சியில் திருடப்படும் தேங்காய்கள் பல கரவெட்டி கோவிற் சந்தைப் பகுதியில் விற்பனைக்கு வருவதாக அப்பகுதி வாழ் மக்கள் தெரிவித்துள்ளனர்.

தென்மராட்சிப் பகுதிக்கு வீடு பார்க்கச் செல்கிறோம் என்ற சாக்கில் திருட்டு ஆசாமிகள் பலரும் அங்கு சென்று தேங்காய்களை திருடிவந்து கரவெட்டி கோவிற் சந்தையில் விற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது விடயத்தில் பொதுமக்கள் மிக அவதானத்துடன் செயற்பட்டாலேயேஇத் திருட்டு முயற்சியை முறியடிக்கமுடியும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-41)

# சகலருக்கும் சுகாதார அட்டைகள் வழங்கப்படும்

(கொழும்பு)

நாட்டிலுள்ள சகல மக்களுக்கும் சுகாதார அட்டைகளை வழங்க சுகாதார அமைச்சுதீர்மானித்துள்ளது.

வயது பேதமின்றி சகல பிரஜைகளுக்கும் இவ்வட்டைகள் வழங்கப்படவுள்ளன.

மக்களுக்கு வழங்கப்படும் சுகாதார அட்டைகளைப் பிரசோதிப்பதன் மூலம் அந்தந்த பிரதேசங்களிலுள்ள வைத்தியசாலைகளில் நடைபெறும் செயற்பாடுகள் பற்றி சரியாக அறிந்து கொள்ள முடியும்.

இத்துடன் ஒருநோயாளர் பலவைத்தியர்களிடம் சிகிச்சை பெறும் போது ஏற்படும் பாதிப்புக்களை தவிர்ப்பதற்கு இவ்வட்டைகள் சகல வழியிலும் துணைபுரியுமென சுகாதார சங்கத் தலைவர் வீரசேகரவும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ)

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரணதர மாதிரிப் பரீட்சை - 2000

## கணிதம் பகுதி - 1

நேரம் : 1 மணி

யாழ்- சி.டி. பல்குணன்லாலா
(யா/மல்லாகம் ம.வி.)

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க

01) ஒவ்வொன்றும் ரூ 18 விலைப்படி சில தேங்காய்களை வாங்கியவர், ஒவ்வொன்றும் ரூ 3 ஆல் விலை குறைந்திருந்தால் அதே பணத்தொகைக்கு 24 தேங்காய்கள் வாங்கியிருப்பேன் எனக் கூறினார் எனின் அவர் வாங்கிய தேங்காய்கள் எத்தனை?

02) சுருக்குக. $\frac{C^2-9}{C^2-3c}$

03) $12a^2b$, $8ab^2$, $6abc$ இன்
(அ) பொ.ம.சி. யாது (ஆ) பொ.கா.பெ. யாது?

04) $\triangle ABC$ இல் $\hat{A}=X$ பாகை, $\hat{B}=2X$ பாகை, $\hat{C}=3X$ பாகை எனின் முக்கோணத்தின் பக்கங்களை நீளத்தின்படி ஏறு வரிசையில் தருக.

05) 'முப்பத்து மூன்று மில்லியன் இருபத்தாறு' என்பதை இலக்கங்களில் எழுதுக.

06) வருடம் 10% கூட்டு வட்டிக்கு ரூ 1000 ஐ கடனாக வாங்கியவர் 2 வருடமுடிவில் கடனைத் தீர்ப்பதற்கு செலுத்த வேண்டிய மொத்தம் எவ்வளவு?

07) 10cm பக்கமுடைய சதுரம் ABCD இன் பக்கங்கள் AB,BC,CD,DA என்பவற்றின் நடுப்புள்ளிகள் முறையே P,Q,R,S என்பன எனின் நாற்பக்கல் P,Q,R,S இன் பரப்பளவைக் கணிக்க.

08) நீளம் 154cm அகலம் 28cm ஆகவுள்ள செவ்வகத் தகட்டிலிருந்து 7cm ஆரையுடைய வட்டங்கள் எத்தனை வெட்டலாம் எனக் காண்க.

09) A B என்பன இரு தொடைகள். $n(A)=8$, $n(B)=6$, $n(A')=12$ எனின்
(அ) n(&) (ஆ) $n(B')$ என்பவற்றைக் காண்க.

10) முறையே 2C, 1cm ஆரையுடைய A,B என்னும் இரு நாணயங்கள் மேசையொன்றின் மீது கிடையாக வைக்கப்பட்டுள்ளன. நாணயம் A நிலையாக இருக்க நாணயம் B ஆனது A யைத் தொட்டவாறு நகர்கிறது எனின் B யின் மையத்தின் ஒழுக்கு யாது?

11) வியாபாரியொருவர் பொருளொன்றின் விற்பனையால் 8% நட்டமடைந்தார். அவர் விற்பனை விலையை ரூ. 60 ஆல் அதிகரித்திருந்தால் 12% இலாபமடைந்திருப்பார் எனின் பொருளின் கொள்விலை யாது?

12) 4 சாரங்களினதும், 5 துவாய்களினதும் விலை ரூ 1300, 1 சாரத்தினதும் 2 துவாய்களினதும் விலை ரூ 400 எனின் 1 சாரத்தினதும், 1 துவாயினதும் விலை யாது?

13) 12 Cm பக்கமுடைய ஒழுங்கான பல்கோணியொன்றின் சுற்றளவு 96 Cm அதன் ஓர் அகக் கோணத்தினளவைக் கணிக்க.

14) முக்கோணியொன்றின் பக்க நீளங்களாவன 12Cm, 9Cm, xCm எனின் x இன்
(அ) மிகக் குறைந்த முழுவெண் பெறுமதி யாது?
(ஆ) மிகக் கூடிய முழுவெண் பெறுமதி யாது?

15) 6Cm ஆரையுடைய உலோகக் கோளமொன்றினை உருக்கி 1Cm ஆரையுடைய அரைக் கோளங்கள் எத்தனை செய்யலாம்?

16) x ரூபாவிலிருந்து x சதத்தினைக் கழிக்க வரும் மீதி எவ்வளவு?

17) 3, 5, 2, 6, 7, 2, 3, 7, x என்ற பரம்பலின் ஆகாரமும், இடையமும் சமனெனின் x இன் பெறுதியைக் காண்க.

18) வட்ட நாற்பக்கலொன்றின் எதிர்க் கோணங்கள் முறையே 2x+40 பாகை, x-10 பாகை எனின்
(அ) x ஐக் காண்க
(ஆ) தரப்பட்டு கோணங்களின் அளவுகளை கூறுக.

19) $y=3x-2$ என்ற நேர் கோட்டின் மீது A (t, t) என்ற புள்ளி உள்ளது?
(அ) நேர்கோட்டின் படித்திறன் யாது?
(ஆ) t இன் பெறுமதி யாது?

★ நவம்பர் 25, 26 ந் திகதிகளில்வெளியான சமய பாட வினாக்களுக்கான விடைகள் நாளை வெளியாகும்.

## உசன், மிருசுவில் பகுதிகளில்

# ஆட்கள் இல்லாத அதிக வீடுகளில் திருட்டுக்கள் பெருமளவில் அதிகரிப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சி கிழக்கு பிரதேசத்திலுள்ள மிருசுவில், உசன் பகுதிகளில் ஆட்களில்லாத வீடுகளில் இருக்கும் பெறுமதி மிக்க பொருட்கள் அங்கு தற்போதும் தங்கியிருக்கும் சிலரால் களவாடப்பட்டு வடமராட்சிப் பகுதிக்குக் கொண்டு சென்று மலிவு விலையில் விற்பனை செய்யப்படுவதாகத் தெரிய வருகின்றது.

அதேசமயம், மிருசுவில், உசன், கொடிகாமம் பகுதிகளிலுள்ள தென்னந் தோட்டங்களில் இருந்து தேங்காய், மட்டை மற்றும் ஓலைகள் போன்றவை மிக மலிவாக விற்பனை செய்யப்பட்டு வருவது பற்றிய தகவலும் தற்போது கிடைத்துள்ளது.

இதனால் தற்போது வடமராட்சி பிரதேசத்தில் தேங்காயின் விலை முன்னைய விட சற்று குறைவாகவே இருந்து வருகின்றது.

இப்பகுதிகளில் குடியிருந்த பல குடும்பங்கள் தமது பாதுகாப்பினைத்தேடி வடமராட்சி, வலிகாமம்பிரதேசங்களில் தற்போது தங்கியிருப்பதால், அப்பகுதிகளில் தற்போது நிலை கொண்டுள்ள திருடர்களின் பாடு மிகவும் கொண்டாட்டமாக இருந்து வருகின்றது.

இத்தகையவர்கள் தமது தந்திரமிக்க செயல்பாடுகளினால் பாதுகாப்புப் படையினரையும் உச்சி விட்டு தம் பணிகளை நன்கு முடுக்கி விட்டுப் பயன் பெற்று வருகின்றனர் எனவும் அறியப்படுகின்றது.

இப் பகல் நேரத் திருடர்களின் நடவடிக்கைகள் பற்றி அங்கு வீடுகளும் உடமைகளும் உடையவர்கள பாதுகாப்புப் படையினரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர். இதனைத் தொடர்ந்து திருட்டுச் சம்பதங்களில் ஈடுபடும் திருடர்கள் தமது செயற்பாடுகளைக் குறைத்துள்ளதாகவும் தெரியவருகின்றது. (க-77)

## இன்று ஒரு தகவல்

# நீதிமான்களுக்கு நீதிமான்

நீதி செய்வதென்பது, எல்லோராலும் செய்ய முடியாத ஒன்று. அது தானாக வந்து விடாது அது கடவுளால் அருளப்பட வேண்டும். இன்று நீதி என்பது கேலிக் கூத்தாகி விட்டது.

அந்த நாளில் இஸ்ரேல் தேசத்தை ஆண்டு வந்த ஒரு நீதிமானின் தீர்ப்பினைக் காண்போம்.

அந்த இராச சமுகத்தில் இரண்டு விலை மாதர்கள் வந்து நின்றார்கள். அதில் ஒருத்தி, என் ஆண்டவனே நானும் இந்த பெண்ணும் ஒரே வீட்டில் குடியிருக்கிறோம். நான் இவளோடு குடியிருக்கையில் ஒரு ஆண் பிள்ளையைப் பெற்றேன். நான் பிள்ளை பெற்ற மூன்றாம் நாளில் இந்தப் பெண்ணும் ஒரு ஆண்பிள்ளையைப் பெற்றாள். நாம்ஒன்றாயிருந்தோம். எங்கள் இருவரையும் தவிர வீட்டுக்குள்ளே வேறொருவருமில்லை. இராத்திரி தூக்கத்திலே இந்த ஸ்திரி தன்பிள்ளையின் மேல் புரண்டு படுத்ததினால் அது இறந்து போயிற்று. அப்பொழுது நான் நித்திரை செய்கையில், இவள் நடுஜாமத்தில் எழுந்து என்பக்கத்திலே கிடந்த என் பிள்ளையை எடுத்து தன் மார்பிலே கிடத்திக் கொண்டு, இறந்த தன் பிள்ளையை எடுத்துஎன் மார்பிலேகிடத்தி விட்டாள். என்பிள்ளைக்கு பால் கொடுக்கக் காலை நான் எழுந்திருந்த போது அது செத்துக் கிடந்தது. பொழுது விடிந்த பொழுது நான்அதை உற்றுப் பார்க்கும் போது, அது நான் பெற்ற பிள்ளை அல்லவென்று கண்டேன்' என்றாள்.

அதற்கு மற்ற ''ஸ்திரீ அப்படியல்ல உயிரோடிருக்கிறது என் பிள்ளை செத்தது உன் பிள்ளை'' என்றாள். இவளோ ''இல்லை செத்தது உன் பிள்ளை உயிரோடிருக்கிறது என் பிள்ளை'' என்றாள். இப்படி ராசாவுக்கு முன்பாக வாதாடினார்கள். அப்பொழுது ராசா உயிரோடிருக்கிறது என் பிள்ளை செத்தது உன் பிள்ளை என்று இவள் சொல்லுகிறாள் அப்படியல்ல செத்தது உன்பிள்ளை உயிரோடிருக்கிறது என் பிள்ளை என்று அவள் சொல்லுகிறாள் என்றுசொல்லி, ஒரு பட்டயத்தைக் கொண்டு வாருங்கள் என்றான். அவர்கள் ஒரு பட்டயத்தை ராசாவினிடத்தில் கொண்டுவந்தார்கள். ராசா ''உயிரோடிருக்கிற பிள்ளையை பிளந்து பாதியைஇவளுக்கும்பாதியை அவளுக்கும் கொடுங்கள்'' என்றான். அப்பொழுது உயிரோடிருக்கும் பிள்ளையின் தாய், தன் பிள்ளைக்காக அவள் குடல் துடித்ததினால் ராஜாவை நோக்கி, ''ஐயோ என் ஆண்டவனே உயிரோடிருக்கிற பிள்ளையைக்கொல்ல வேண்டாம். அதைஅவளுக்கே கொடுத்து விடும்'' என்றாள். மற்றவள் ''எனக்கும் வேண்டாம் உனக்கும் வேண்டாம் பிளந்து போடுங்கள்'' என்றாள். அப்பொழுது ராஜா உயிரோடிருக்கிற பிள்ளையைக் கொல்லாமல் அவளுக்குக் கொடுத்து விடுங்கள் அவளே அதன்தாய்என்றான். ராஜா தீர்த்த இந்த நியாயத்தை இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் கேள்விப்பட்டு, நியாயம் விசாரிக்க தேவன் அருளின் ஞானம் ராஜாவுக்குண்டென்று கண்டு அவனுக்கு பயபக்தியாக இருந்தார்கள். (1 இராசாக்கள் 3:16-28 ஆதாரம்)

இந்த ராஜா யாரென்று நினைக்கிறீர்கள், ஆம் உலகம் முழுவதும் இன்றும் பேசப்படும் சாலொமோன் ராஜா தான் அவன்

தொகுப்பு:-
மு. கிருஸ்ணன்
(மட்டுவில்)

## சித்தாண்டிவிவசாயிகொலை
# 4 இராணுவத்தினருக்கு விளக்கமறியல்

(ஏறாவூர்)

கடந்த ஒக்ரோபர் மாதம் 9 ஆம் திகதி மட்டக்களப்பு சித்தாண்டியில் விவசாயி ஒருவர் கழுத்து வெட்டிக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக ஏறாவூர் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நான்கு இராணுவத்தினரையும் விளக்கமறியலில் வைக்குமாறுமட்டக்களப்பு மாவட்ட நீதவான் கே. விஸ்வநாதன் உத்தரவிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நான்கு இராணுவத்தினரையும் இராணுவப் பொலிஸ் காவலில் வைக்குமாறும் நீதவான் பணித்துள்ளார்.

இதே வேளை இச் சம்பவத்தில் மேலும் நான்கு இராணுவத்தினர் சம்பந்தப்பட்டிருப்பதாகவும், இதில் இரு இராணுவத்தினர் இராணுவ சேவையில் இருந்து விலகி இருப்பதாகவும், ஒருவர் காயமடைந்துசிகிச்சைபெற்று வருவதாகவும், மற்றவர் விடுமுறையில் சென்றிருப்பதாகவும் தெரியவந்துள்ளது. (வ)

## பகிஷ்கரிப்பு போராட்டத்தில்
# தொழில்நுட்பக் கல்லூரி
## பகுதிநேர மாணவரும் இணைவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் இராசையா ஸ்ரீரங்கநாதன் கடந்த 4ம் திகதி மந்துவிலில் படையினரால்கைது செய்யப்பட்டு இதுவரை விடுவிக்கப்படாமையை கண்டித்து இடம் பெற்ற பகிஷ்கரிப்பு போராட்டத்தில் தாமும் இணைந்து கொள்வதாக மேற்படி நிறுவன பகுதிநேர மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேற்படிசக மாணவன் விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும் இல்லாவிடில் தமதுநடவடிக்கையைமேலும் தொடரப் போவதாகவும் யாழ் அரசஅதிபரிடம் மகஜர் ஒன்றுகையளித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளையில் திறந்தபல்கலைக்கழக மாணவர்களும் தாமும் மேற்படி பகிஷ்கரிப்பில் இணைந்து கொள்வதாகவும் அறிவித்தல் விடுத்துள்ளனர். (க-12)

## சந்தைக்கு செல்வோர்
# சிரமம்

(துன்னாலை)

கரவெட்டி கோவிற் சந்தைப் பகுதியில், துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் இன்மையால், அங்கு செல்வோர் பெரும் சிரமமுறுகின்றனர். (உ-41)

# புலிகள் அரசியலில் இணையும் வரை
# யுத்தம் தொடர்வது உறுதி!

## பிரதமர் ரட்ணசிறி சூளுரை

(கொழும்பு)

பயங்கரவாதம் பூண்டோடு ஒழிக்கப்படும் வரை விடுதலைப் புலிகளுக்கெதிரான யுத்தம் தொடர்ந்து நடத்தப்படும்.

இவ்வாறு பிரதம மந்திரி இரட்ணஸ்ரீவிக்கிரமநாயக்க, நேற்று பொரளை இராஜகிரிய வித்தியாலயம், தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டதையொட்டி, நடைபெற்ற விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில்தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்

பயங்கரவாத நடவடிக்கைகளைக் கைவிட்டு, அரசியல் ஜனநாயகத்துக்குள் பிரவேசிக்க விடுதலைப் புலிகள் உறுதியளித்தால் மாத்திரமே அரசாங்கம் அவர்களுடன் பேச்சுவார்த்தையில்ஈடுபடும்; அத்துடன் நாட்டின்ஐக்கியம், கௌரவம்என்பவற்றை பாதுகாக்க உயிர்த்தியாகம் செய்த படைவீரர்களின் தியாகத்தையும் நாம் மறந்து செயற்பட முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை தனது கருத்துக்கும் ஜனாதிபதிசந்திரிக்கா குமாரதுங்காவின் கருத்துக்குமிடையே எந்தவித வேறுபாடும் கிடையாதெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சமாதானச் சூழல் கனிந்து, சர்வதேச மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தைகள், இடம் பெறவுள்ள இத்தருணத்தில் பிரதமரின் கூற்று சமாதான நடவடிக்கைகளை பாதிக்குமா? என ஆய்வாளர்கள் கேள்வியெழுப்பியுள்ளனர். (இ)

# கட்டட வேலைகள் ஆரம்பம்

(கோப்பாய்)

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாகக் கட்டி முடிக்காத நிலையில் காணப்பட்ட கோப்பாய் நாவலர் வித்தியாலய மேல்மாடிக்கட்டிடத்தின் வேலைகள் உடன் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வித்தியாலய அதிபர் கே. வி. குணசேகரம் தெரிவித்துள்ளார். (ச-79)

# இலவச கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

துப்பளை நாவலர் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்படும் கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு இம் மாதம் 28 ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் 2 ஆம் திகதிவரையும் நடைபெறவுள்ளது. (உ)

# மருதனார் மடத்தில் ஒளிவிழா

(அரியாலை)

யாழ்ப்பாணம் தேசியகல்வியியற் கல்லூரி நடத்தும் ஒளிவிழா எதிர்வரும் 29ஆம்திகதி புதன்கிழமை மருதனார் மடத்திலுள்ள மகனீர் நிலையத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்னிந்திய திருச்சபைப் பேராயர் அதிவணக்கத்திற்குரிய கலாநிதி எஸ். ஜெபநேசன் கலந்து கொள்கிறார்.

சிறப்பு விருந்தினராக உரும்பிராய் பங்குத்தந்தை வணபிதா அருள்நேசனும் திருமதி கே. பலசிங்கமும் கலந்து கொள்வர்.

காலை 8.30க்கு ஆரம்பமாகும் ஒளிவிழாவில பல கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (க-106)

# லொறி பாகங்கள் திருட்டு

(கோப்பாய்)

விபத்துக்குள்ளான சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கத்திற்குச் சொந்தமான லொறியிலிருந்தும் ஹோண், காபரேட்டர் என்பன திருடப்பட்ட சம்பவம் கோப்பாய் இராசவீதிப் பகுதியில் அண்மையில் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் காயமடைந்த சாரதி வைத்தியசாலை சென்று வந்து லொறியை அப்புறப்படுத்த முனைந்த போதே இவை திருடப்பட்டமை தெரிய வந்தது.

பகல் வேளையில் இரண்டு மணி நேர இடைவெளியில் இச் சம்பவம் இடம் பெற்றமை சகலரையும் ஆச்சரியப்பட வைத்துள்ளது. (க-79)

# மாணவனை விடுவிக்க ராணுவ தளபதிக்கு கடிதம்

(கொழும்பு)

மந்துவில் பகுதியில் கடந்த 4ம் திகதி சந்தேகத்தின் பேரில் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள யாழ். தொழில் நுட்பக் கல்லூரி மாணவன் இராசையா சிறிரங்கநாதனை உடன் விடுவிக்கக் கோரி அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ. விநாயகமூர்த்தி இராணுவத் தளபதிக்கு கடிதம்ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அவரது கடிதத்தில் யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் பரீட்சைகள் ஆரம்பமாகவுள்ளதாகவும் இம் மாணவனை உடன் விடுவிப்பதற்கு ஆவன செய்யுமாறும் கேட்டுள்ளார். (க-ஸ்ரீ)

# கிராமசேவையாளர் பதவி விரைவில் நிரப்பப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் வெற்றிடமாகவுள்ள 55 கிராம சேவையாளர் பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

நிரந்தர நியமனம் பெற்ற சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களிலிருந்தே 55 கிராம சேவையாளர்களும் நியமிக்கப்படவுள்ளதாக ஈ. பி. டி. பி. யின் யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கே. வி குகேந்திரன், (வி. கே. ஜெகன்) தெரிவித்துள்ளார். (ம

## வாகன வசதி இன்றி
# யாழ். கட்டட திணைக்கள ஊழியர் பெரும் அவதி

யாழ். மாவட்ட கட்டடங்கள் திணைக்களம் இடம் பெயர்ந்த சூழலிலும் தன் பணிகளை பல சிரமங்களின் மத்தியில் செவ்வனே செய்து வருகின்றது.

ஆயினும் இத்திணைக்களத்திறகெனப் பிரத்தியேகமான போக்குவரத்து ஊடகம் ஒன்று இன்மையால் அதிகாரிகள் மிகுந்த அசௌகரியங்களின் மத்தியில் பணிகளைத் தொடர வேண்டியுள்ளது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்குத் தெரிவித்த போதும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என கட்டிடத்திணைக்கள மாகாணப் பிரதம பொறியியலாளர் இ. ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார். (ச-02)

# சட்டவிரோத மின்சாரம் பெற்றோரை தாக்கியது!

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோத மின்சாரம் பெற முயன்ற ஒரே குடும்ப உறுப்பினர்கள் பலர், மின்சாரத்தின் தாக்கத்திற்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் அண்மையில் இருபாலை கிழக்குப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம்பற்றி தெரிய வருவதாவது;

மேற்படி பகுதியைச் சேர்ந்த ஒருவர் சட்டவிரோத மின்னிணைப்புப்பெற முயன்றவேளை வயர் ஒன்று அறுக்கப்பட்டதை அடுத்து அதனை சீர்ப்படுத்த முயன்ற போது மின்சாரத்தின் தாக்கத்திற்கு உள்ளானார்.

இதனைக் கண்ணுற்ற குடும்ப உறுப்பினர்கள் அவரைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபடவே அனைவருமே மின்சாரத்தின் தாக்கத்திற்கு இலக்கானார்கள்.

இருப்பினும், அதிர்ஷ்டவசமாக ஒருவருக்கும் உயிராபத்து நேரவில்லை. தலைக்கு வந்தது தலைப்பாகையுடன் போய்விட்டது.

இவர்களில், மின்சாரத்தினால் கடுமையாகத் தாக்கப்பட்ட தாயும், தந்தையும் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதில் விநோதம் என்னவென்றால், குடும்பத்தில் பிள்ளைகள் தவறுவிட்டால் தட்டிக்கேட்க வேண்டிய தாய் தந்தையரே உயிருக்கு சவால் விடுக்கும் சட்டவிரோத மின்னிணைப்பு பெறுவதற்கு ஒத்துழைத்தது தான்.

எனவே, இனிமேலாவது பகுத்தறிவு மிக்க பெற்றோர் இவ்வாறான சிறுபிள்ளைத்தனமான செயற்பாடுகளுக்கு ஒத்துழைத்து, தமக்குமட்டுமல்லாது, சட்டபூர்வ மின்னிணைப்பு பெற்றவர்களுக்கும் இடைஞ்சல்களை ஏற்படுத்தாது வாழப்பழகிக்கொள்ள வேண்டும் என சமூகத்தின்பால் அக்கறை கொண்ட தரப்பினர் கருத்து வெளியிட்டுள்ளனர். (உ)

# தமிழிற்கான முக்கிய மகாநாடு சென்னையில் நடத்த ஏற்பாடு

(சென்னை)

தமிழுக்கான மக்கள் கூட்டமைப்பு மகாநாடு சென்னையில் நடைபெற இருக்கிறது.

சென்னையில் அடுத்த ஜனவரியில் நடைபெற இருக்கும் இம்மகா நாட்டினை தமிழ் நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம், ஜனநாயகவாதிகள் சங்கம், அனைத்து ஜனநாயக மாதர் சங்கம், இந்திய மாணவர் சங்கம், தமிழ் நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் மன்றம் என்பன இணைந்தே ஏற்பாடுகளைச் செய்கின்றன.

இந்திய பிரதமர் வாஜ்பாய் தமிழை சிமிழாக்குவேன் என்று சொன்னார். அதுமட்டுமல்ல இற்றைவரை தமிழிற்கு எதுவும் செய்யவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஆரம்ப வகுப்புகளில் தமிழை முழுங்கற்கை நெறியாக ஆக்கவில்லையென்றும் இவற்றிற்கான பிரச்சார இயக்கமாகவே இந்த மகாநாடு கூட்டப்படுகிறதென்றும் அமைப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தமிழை ஆட்சிப்பீடத்திலும் அக வாழ்க்கையிலும் மேம்படுத்துவதற்கு இந்த மகாநாடு உந்து சக்தியாக அமையும் என்று தெரிவிக்கப்படுகிறது. (து)

## காஷ்மீர், பிரச்சினைத் தீர்வு குறித்து முஷாரப்புடன் பேச்சு

காஷ்மீர் பகுதியில் இருந்து பாகிஸ்தான் சென்றிருக்கும் முஸ்லிம் தலைவர் அப்துல்லா பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளர் பெர்வேஸ்முஷாரப்பை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

காஷ்மீர் பிரச்சினைக்கு முடிவு காண்பது தொடர்பான வழிமுறைகள் குறித்து இச்சந்திப்பின் போது ஆராயப்பட்டதாக தெரியவந்துள்ளது.

ரம்ழான் மாதத்தினைமுன்னிட்டு இந்தியப் பிரதமர் அடல்பிஹாரிவாஜ்பாயினால் காஷ்மீர் பிராந்தியத்தில் யுத்த நிறுத்தஅறிவிப்பு வெளியிடப்பட்டிருப்பது குறித்தும் மேற்படி சந்திப்பின் போது விவாதிக்கப்பட்டது.

இதேசமயம், காஷ்மீர் பிரச்சினைகள் குறித்து இந்தியாவுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதாயின் நேர்மைமிக்க முயற்சிகள் அவசியம் என்று பாகிஸ்தான் ஆட்சியாளர் தெரிவித்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (உ)

## வீரிய மாத்திரை பாவிக்க சிங்கப்பூரில் தடையாம்

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் கான்பெயிலான் வீரிய மாத்திரைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூர் சுகாதார அமைச்சு இந்தத் தடையை விதித்துள்ளது. இதனை மீறுவோருக்கு பத்தாயிரம் டொலர் பணம் தண்டனையாக விதிக்கப்படுமென்றும் அறிவித்துள்ளது.

கான்பெயிலான் மாத்திரை மூலிகை மூலம் செய்யப்படுகின்றனவென்றும் இந்த மாத்திரை அபின் போன்ற போதைவஸ்துப் பொருட்கள் சேர்த்துச் செய்யப்படுவதாகவும் சுகாதார அமைச்சு தெரிவிக்கிறது.

முதியவர்கள் வீரியத்துடன் வாழ்வதற்காக இதனைப் பாவிக்கிறார்களென்றும் தொடர்ந்து இந்த மாத்திரைகளை உட்கொண்டால் இருதய நோய் மற்றும் சுவாசம் சம்பந்தமான நோய்கள் வருமென்றும் மரணமும் ஏற்படுமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

கான்பெயிலான் மாத்திரை நச்சுப் பொருட்கள் சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்டிருப்பதாகவும் அமைச்சு தெரிவிக்கிறது. (து)

## கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்ட ஐவரையும் போட்டியிலிருந்து நீக்கலாம்

### மத்திய புலனாய்வுத்துறை தெரிவிப்பு

[புதுடில்லி]

கிரிக்கெட் ஆட்ட சூதாட்ட மோசடியுடன் தொடர்புபட்ட ஐவரையும், கிரிக்கெட் ஆட்டத்தில் இருந்து வாழ்நாள் பூராவும் நிறுத்தி வைக்க முடியும் என மேற்படி மோசடி குறித்து விசாரணைகளை நடத்திவரும் இந்திய மத்திய புலனாய்வுத்துறை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கிரிக்கெட் ஆட்ட மோசடியுடன் தொடர்புபட்டவர்கள் என நிருபிக்கப்பட்ட இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் முகமட் அஸாருதீன், அஜேய்ஜடேயா மனோஜ் பிரபாகர், அஜேயத் சர்மா, நாயக்மொங்கியா ஆகியோர் தற்போது கிரிக்கெட் ஆட்டத்தில் இருந்து இடை நிறுத்திவைக்கப்பட்டுள்ளனர்.

இருப்பினும், நாளை செவ்வாய் நடைபெறவுள்ள இந்திய கிரிக்கெட்சபைக் கூட்டத்திலேயே என்ன நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து விவாதிக்கப்படும் என கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் ஏ.சி. முத்தையா தெரிவித்துள்ளார். [உ]

## யுகோ அதிபர் தேர்தலில் போட்டி

(பெல்கிரேட்)

யுகோஸ்லாவிய முன்னாள் அதிபர் மிலோசெவிக்சேர்பிய சோசலிசக் கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் பதவியிலிருந்து இறக்கப்பட்டதை அடுத்து வெளிநாடு ஒன்றிற்கு தப்பியோடிய அதிபர்மிலோசெவிக்என்பதும் அவர் இப்பொழுது சேர்பிய சோசலிஸக் கட்சியின் தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் இருபத்திமூன்றாந்திகதி நடக்க இருக்கும் சேர்பிய சட்டசபைத் தேர்தலில் இவரது கட்சியும் இவரும் போட்டியிடவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (து)

உலக தரிசனம்

## சந்தனமரக் கடத்தல் வீரப்பன் வெகுஜன விரோதி அல்லன்

### பரவலான கருத்து இதுவே

(சென்னை)

சந்தனமரக் கடத்தல் வீரப்பன் குறித்து பல்வேறு அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்ற போதிலும் இவன் உண்மையில் ஒரு வெகுஜனவிரோதி அல்லன் என்ற எண்ணப்பாடு பரவலாக நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது;

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது;

வீரப்பனின் சொந்த வாழ்வில் ஏற்பட்ட சோதனைகளே அவனை இப்படியாக உலக மக்கள் மத்தியில் தோற்றம் பெறவேண்டிய ஓர் கட்டாயத்தை அவனுக்கு ஏற்படுத்தியுள்ளன.

இவன் வாழ்வில் பல முறை பழி வாங்கப்பட்டுள்ளான். இவனது மனைவி பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இவனது சொந்தச் சகோதரனிற்கு எதிராக அரசியலாளர்களால் துரோகத்தனமும் அநீதியும் இழைக்கப்பட்டுள்ளன.

யானைகளை கொன்று தந்தங்களை விற்றுஇவன் பெரும் பணம் சம்பாதித்தானே ஒழிய மக்களை கொன்றவன் அல்ல.

தன்னைகைது செய்யமுயன்றோரையே இவன் திருப்பி தாக்கி அழித்துள்ளான்.

தமிழ்க் கைதிகள் பலர் தடாச்சட்டத்தின்கீழ் தமிழக அரசால் கைதிகளாக்கப்பட்ட போது இவன் நீதி கேட்டான் கிடைத்ததா? இல்லவே இல்லை.

கன்னட நடிகர் ராஜ்குமார் விடயத்தில் கூட இவன் மனிதாபிமான அடிப்படையில் நடந்து கொண்டது மட்டுமன்றி அவரை விடுதலை செய்தும் உள்ளான்.

கன்னட நடிகர் ராஜ்குமருடன் கடத்தப்பட்ட நாகப்பன் இவனுடன் சண்டையிட்ட போதும் கூட நாகப்பனை இவன் கொல்லவில்லை நினைத்திருந்தால் நாகப்பனை சாகடிக்க முடியும்

மேலும் தமிழக கர்நாடக அரசுகளுடன் இவன் நடத்திய பேச்சுவார்த்தையில் பொது நலம் மிகுந்து காணப்பட்டதே ஒழிய சுயநலம் காணப்படவில்லை.

(க-து)

## இரு தரப்பும் இணையாதவரை பேச்சுவார்த்தை தொடங்க முடியாது

### காஷ்மீர் ஆளுநர் தெரிவிப்பு

(புதுடில்லி)

இரு தரப்பினரும் முன் முயற்சிகள் எடுக்கப்படாதவரை பேச்சுவார்த்தைகள் தொடங்க முடியாதென்று காஷ்மீர் ஆளுநர் தெரிவித்தார்.

இந்திய மத்திய அமைச்சர் எல். கே. அத்வானி கூட்டிய முக்கிய கூட்டத்தில் கலந்து கொண்ட பின்னர் பத்திரிகையாளர்கள் மத்தியில் அவர் உரையாற்றுகையில்.

தீவிர வாதிகளுடன் காஷ்மீர் பற்றி பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அடித்தளம் அமைக்கப்படுவதாகவும் இந்த யுத்த நிறுத்தத்தை சாதகமாகக் கொண்டு பாகிஸ்தான் தொடர்புடைய தீவிரவாதிகளும் ஒரு தலைப்பட்சமாக ரம்ழான் யுத்த நிறுத்தத்தை அறிவித்த போதும் பதினைந்துக்கு மேற்பட்ட பொது மக்கள் கொல்லப்பட்டிருப்பதாகவும் இந்த வேளையிலும் இந்திய இராணுவம் அமைதி பேணுவதாகவும் காஷ்மீர் ஆளுநர் தெரிவித்தார்.

இதே வேளை, இந்த யுத்த நிறுத்தம் தொடர்பாகவும் எல்லைப்புற தீவிரவாதிகளின் நடத்தைகள் தொடர்பாகவும் நிர்வாகத் துறையினரும் புலனாய்வுத் துறையினரும் ஆராய்ந்துவருவதாகவும் சமாதானப் பேச்சுக்களுக்கான அறிகுறி தென் பட்டால் அதனை தொடர்ந்து வரவேற்பதாகவும் தெரிவித்தார். (து)

## லெபனானில் குண்டுத் தாக்குதல்

இஸ்ரேலின் குண்டு வீச்சு விமானங்கள் லெபனானில் குண்டுத்தாக்குதல் நடத்தியுள்ளது

தென் கிழக்கு லெபனானில் சிரியா எல்லைக் கரையில் குண்டு ஒன்று வெடித்ததை அடுத்து இஸ்ரேலிய விமானம் குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. [து]

## கொரியப் பேச்சுவார்த்தை டிசம்பருக்கு ஒத்திவைப்பு

(சியோல்)

வடகொரியாவிற்கும் தென்கொரியாவிற்கும் இடையே நடைபெற இருந்த முக்கிய பேச்சுவார்த்தைகள் பின் போடப்பட்டன.

நவம்பர் மாதம் இடம் பெற இருந்த இரு கொரியாக்களுக்குமிடையேயான பேச்சுக்கள் டிசம்பர் மாதத்திற்கு தள்ளி வைக்க வேண்டுமென்று வடகொரியா தென்கொரியாவிற்கு அறிவித்துள்ளதென்று தென்கொரியா செய்திவெளியிட்டிருக்கிறது.

நவம்பர் மாதத்தில் இரு கொரியாக்களுக்கிடையேயான பேச்சு வார்த்தை நாளில் வடகொரியா வேறு முக்கிய பேச்சு வார்த்தைகளில் ஈடுபட இருப்பதால் இந்தப் பேச்சுவார்த்தைகள் பின் போடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (து)

## உலகில் மகிழ்ச்சியான நாடாக கொலம்பியா தெரிவானது

(லண்டன்)

உலகிலே கூடுதலான மக்கள் மகிழ்ச்சியாக வாழும் நாடு கொலம்பியா என்று கருத்துக்கணிப்பொன்று தெரிவிக்கிறது.

ஒவ்வொருநாட்டு மக்களின் வாழ்க்கையையும்மற்றநாட்டு மக்களின் வாழ்கையுடன் ஒப்பிட்டு அவர்கள் மகிழ்ச்சி பற்றிஎடைபோட்டுமுன்னேறுகிறார்கள். மகிழ்ச்சியாக இருக்க முனைகிறார்கள்.

இந்த வகையில் உலக பெண்கள் கட்டமைப்பு ஒன்று மகிழ்ச்சி பற்றிய உலகளாவிய கணிப்பீடு ஒன்றை மேற்கொண்டுள்ளது. நாட்டுமக்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்களென்ற நாட்டில் முன்னேற்றம் உண்டு. பிரச்சினைகள் இல்லை என்பது ஓரளவு உண்மையாகும்.

கொலம்பியா இந்தக்கணிப்பீட்டில் முதலாவது மகிழ்ச்சியான மக்கள் வாழும் நாடு என்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நாட்டில் வாழ்வோரில் எழுபத்து மூன்று சதவீத மக்கள் மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள் என்று கணிப்பீடு ஒன்று தெரிவித்துள்ளது.

உலகிலே அனேகமான நாடுகள் முப்பத்தைந்து வீத மகிழ்ச்சியில் இருப்பதாகவும் ரஷ்யா ஐந்தாவது மகிழ்ச்சியுடைய நாடென்றும் அந்த பெண்கள் அமைப்பின் கணிப்பீடு தெரிவிக்கிறது.

உலகிலே மகிழ்ச்சி மிகவும் குன்றிய நாடாக பிறேசில் தெரிவாகியுள்ளதாகவும் அறியப்படுகிறது. (து)

## புடாபெஸ்ரில் ஆரம்பித்த முக்கிய மகாநாடு

(புடாபெஸ்ற்)

மதித்து முன்மொழிவு தெரிவிக்கும் நாடுகளின் உச்சி மகா நாடு ஹங்கேரி தலைநகரான புடாபெஸ்றில் ஆரம்பமானது

பதினாறு நாட்டுத் தலைவர்களும் அமைச்சர்களும் கலந்து கொண்ட இந்த மகாநாட்டில் நிதியமைச்சர்களும் கலந்துகொண்டது சிறப்பம்சமாகக் கருதப்படுகிறது.

இந்த உச்சி மகா நாட்டில் தென் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் நிதி நிலைகள் பற்றியும் மத்திய ஐரோப்பிய நாடுகளின் பிரச்சினைகளும் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்புகளில் யூகோசிலாவியாவை மீண்டும சேர்ப்பது பற்றியும்பொருளாதாரவிருத்திகள்பற்றியுமமகாநாட்டில் எடுத்து விளக்கப்பட்டதாம். (து)

இறைகாக்கும் வையகம்
எல்லாம் அவனை
முறை காக்கும் முட்டாச்
செயின்

- குறள் -

# வலம்புரி

## குருதியால் நனைந்தமண்

இன்று 27ந் திகதி மாவீரர் நாள், மண்மீட்புப் போரில் மரணித்த போராளிகளை நினைவு கூரும் நாள்.

போர்க்களத்தில் உயிரிழந்தவர் எந்தப் பக்கமாக இருந்தாலும் அவரது உடலுக்கு மதிப்பளிக்கும், மரியாதை செலுத்தும் உயரிய மரபு யுத்த தர்மங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. அதனால்தான் துட்டகைமுனு சிறந்த வீரனான எல்லாளனுக்கு வணக்கம் செலுத்துமாறு பணித்தான். இது அவனது உயரிய பண்பை - உத்தம குணத்தையே காட்டுகிறது. ஆனால் அவனது பரம்பரையில் அந்த உயரிய பண்பு நின்று நிலைக்க முடியாது போயிற்று. அதனாலேயே கோப்பாய், கொடிகாமம், ஆகியஇடங்களிலுள்ள மாவீரர் துயிலும் இல்லங்கள் அழிக்கப்பட்டன.

ஓர் இனத்தின் விடிவுக்காகப் போராடி உயிர் நீத்த மாவீரர்களின் கல்லறைகளை அழிப்பதன் மூலம் அவர்களின் இலட்சியத்தை அழிக்க முடியாதென்பதை உரியவர்கள் இப்போதாவது உணர்ந்து கொள்வார்கள்.

மரணித்தவர்கள் விடுதலைப் புலிகளின் போராளிகள் எனினும் அவர்கள் தமிழ்த்தாய்பெற்றெடுத்த மைந்தர்கள் என்பதை யாரும் மறந்து விடவோ மறுத்து விடவோ முடியாது.

கடந்த பதினேழு ஆருட கால ஈழப்போரில் சுமார் பதினையாயிரம் போராளிகள் மரணித்துள்ளரெனில் - பதினையாயிரம் போராளிகளின் குருதியால் இம்மண் நனைந்ததெனில் அம் மாவீரர்கள் மீது மக்கள் எத்துணை மதிப்பும், மரியாதையும் கொண்டிருப்பர் என்பதை இலேசாகக் கணக்குப் போட்டு விடமுடியாது.

அதேவேளை பதினையாயிரம் போராளிகள் தம் உடலை, உயிரை தியாகம் செய்தார்களெனில் அவர்களின் இலட்சியம் சாதாரணமானதாக இருக்குமா?

இதனைதென்னிலங்கை அரசியல் வாதிகள் உணர்ந்து கொள்வது அவசரமான தேவையாகும். ஏனெனில் படைத்தரப்பிலும் பல ஆயிரக்கணக்கான வீரர்கள் மரணித்துள்ளனர்.

எனவே, மரணங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதை தடுக்க-தவிர்க்கஎல்லோரும் ஒன்றிணைந்து காத்திரமான நடவடிக்கைகளை எடுப்பது மிக மிக அவசியமாகும்.

---

### சில கிறிஸ்தவ சபைகளின் மதம் மாற்றும் நடவடிக்கை

# மண்மீட்புப் போருக்கு அப்பால் ஓர் மதவாதப் போருக்கும் வழி கோலுமா?

## குருக்ஷேத்திரம்

அந்நியர் ஆட்சி இலங்கையில் கால் திக்க முன்னர் இம் மண்ணில் கிறிஸ்தவம் என்ற சமயம் இருக்கவில்லை. எல்லோரும் சைவசமயத்தவர்களாகவே இருந்தனர். சைவத் தமிழர்களே அன்று வாழ்ந்தனர். ஆனால்காலத்தின் கோலமாகஅந்நியராட்சி இலங்கைக்குள் ஊடுருவியது. இதனால் சிவாலயங்கள் அழிக்கப்பட்டன.

சைவ சமயத்தவர்கள் தமது பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாக்கக் கூட முடியாத நிலையில் தவித்தனர். எனினும்உயர்பதவி வேலைவாய்ப்புகள் மதம் மாறுவோருக்கு மட்டுமே வழங்கப்பட்டது. இதன் காரணமாக சைவத்திலிருந்து குறிப்பிட்ட தொகையினர் கிறிஸ்தவத்திற்கு மாறினர். அதன் மூலம் அவர்களின் குடும்பங்கள் உயரிய வாழ்க்கையை அனுபவிக்க முடிந்தது உண்மையே, ஆனால் பலர் தமது சமயத்தைக் கைவிடாது கொண்ட கொள்கையில் உறுதியாக இருந்தனர். இதனால் அவர்கள் அனுபவித்த துன்ப துயரங்கள் கொஞ்சமல்ல. இருப்பினும் பிறமதங்களையும்ஆதரிக்கும், மதிக்கும் பண்பு சைவத்தில் உண்டு. அதனால்தான் 1948இல்சுதந்திரம்கிடைத்த பின்பும் சைவத் தமிழர் கிறிஸ்தவத்திற்கு எதிராகப் போர்க் கொடி தூக்கவில்லை. அந்த நல்லெண்ணத்தை பலவீனமாக கருதிக் கொண்டவர்கள் சிவ பூமி எனப் போற்றப்படும் இம் மண்ணில் தமது மதத்தை பரப்பி சைவத்தை அஸ்தமனப்படுத்த முனைந்தார்கள் அதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகிறார்கள். அதன் ஒரு நடவடிக்கையே மதமாற்றமாகும்.

### மதமாற்றம்

யுத்த நெருக்கடி, அதனாலேற்பட்ட இடப்பெயர்வு, பஞ்சம், பசி இதனைச் சாதகமாகக்கொண்ட சில கிறிஸ்தவ சபைகள் (இங்கு எல்லா சபைகளையும் குறிப்பிடவில்லை) அவர்களுக்கு உதவுவதுபோல் பாசாங்குசெய்து கச்சிதமாகத் தமது சபைகளுக்கு மாற்றிவிடுகின்றனர். இத்தகைய செயல்கள் சைவ சமயத்தவர்கள் மத்தியில் பெரும் மனவேதனையை ஏற்படுத்தியுள்ளது அதுமட்டுமன்றி மதமாற்றத்தில் முனைப்புடன் ஈடுபடும் குறிப்பிட்ட சில கிறிஸ்தவ சபைகள் சைவத் தெய்வங்களைச் சாத்தான் எனக் கூசாமல் குறிப்பிடுகின்றனர். உண்மையில் இயேசுபிரான் இன்றிருந்தால் தன்னை சிலுவையில் அறையும்போது படாத துன்பத்தை இவ்வார்த்தைப் பிரயோகங்கள் அவருக்கு ஏற்படுத்தியிருக்கும். சைவசமயத்தவர்களின் வீடுகளுக்குச் சென்று தமது பிரசாரப் புத்தகங்களை விற்பனை செய்வதும் சைவசமயத்தைநிந்தனை செய்வதிலும் சில கூட்டங்கள் கூட்டாக வெளிக்கிட்டுள்ளன. இந்நிலைமைகள் சைவ அமைப்புகளுக்கு பெரும்

## மதம் மாற்றுவதில் ஈடுபடுவோர் ஊழிக்காலத்துக் கூட்டத்தினரே

கவலைகளைஏற்படுத்தியுள்ளபோதிலும், உன்னைப்போல் பிறரையும் நேசி என்ற யேசுபிரானின் வார்த்தையை உரியவர்கள் கடைப்பிடிக்காவிடினும், சைவத்தவர்கள் கடைப்பிடிக்கிறார்கள். அதனாலேயே அவ்வமைப்புகள் மௌனத்தைக் கடைப்பிடிக்கின்றன.

### மாறிநடந்தால் நிலைமை என்னவாகும்

இன்று சில கிறிஸ்தவசபைகள் சைவசமயத்தவர்களின் வீடுகளுக்குச் சென்று தமது மதப்பிரச்சாரங்களைச் செய்யவும் சைவத் தெய்வங்களை நிந்தனை செய்யவும் சைவத்தவர்கள் மௌனமாக கேட்டுக்கொண்டிருக்கின்றனர். இது ஏன் தெரியுமா? வீடு தேடிவந்தவர்களிடம் நயத்தக்க நாகரிகமாக நடந்து கொள்ளவேண்டுமென்பதாலேயே. அப்படியாயின் அத்தகைய உயரியகுணத்தை ஏற்படுத்தியது சைவசமயம் என்பதைமறுக்கமுடியாதல்லவா?

இதுஒருபுறமிருக்க மதம் மாற்றும் நடவடிக்கையில் ஈடுபடும் கிறிஸ்தவர்களின் வீடுகளுக்குச் சைவ சமயத்தவர்கள் சென்று சைவத்தில் சேருங்கள் என்று கேட்டால் நிலைமை எப்படி இருக்கும், என்பதைக் கற்பனை கூட செய்து பார்க்க முடியாது. ஏனெனில் அதனை ஏற்றுக் கொள்ளும்- தாங்கிக் கொள்ளும் மனப்பக்குவம் அவர்களிடம் இல்லை, எனவே இப்படித்தான் சைவத் தெய்வங்களை நிந்தனை செய்யும் போது சைவசமயிகளின் மனதில் வேதனை புடைக்கிறது இதை மதம் மாற்றும் பிரகிருதிகள் மறந்துவிடக் கூடாது.

### ஓரிஸாமாநிலம் தந்தபாடம்

இந்தியாவின்ஓரிஸாமாநிலத்தில் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த மதகுருவும், அவரது இரண்டு பிள்ளைகளும் காரில்வைத்து தீயிட்டுக் கொளுத்தப் பட்டனர், அத்தகைய விரும்பத்தகாத சம்பவங்கள் அங்கு தொடர்ந்தும் நடந்துள்ளது.

இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் மதமாற்றமே.

அவுஸ்திரேலியாவிலிருந்து ஓரிஸா மாநிலத்திற்கு வந்த குறிப்பிட்ட மதகுரு, மதம் மாற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டார் இதனால் ஆத்திரமுற்ற இந்துக்கள் விரும்பத்தகாத- பாவகாரியமான அச் செயலைச் செய்தனர். இதுநமக்கு மட்டும் விரும்பத்தகாத செயலாக இருக்குமே ஒழிய, ஒரிஸா மாநிலஇந்துக்கள் மதமாற்றம் செய்பவர்களுக்கு இதுவே உரிய தண்டனை எனக் கூறியுள்ளனர்.

எனவே எதனையும் வந்த பின்னர் சிந்திப்பதை விடுத்து வருமுன்னர் காப்பதே சிறந்ததாகும் இக்கருத்து இம்மண்ணில் மதமாற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் பொருந்தும்.

### மதச்சுதந்திரம்

ஒருமனிதன் எந்த மதத்தினும், எந்தத்தெய்வத்தையும் வணங்குவதற்குச் சுதந்திரம் உண்டு அது அவனது பிறப்புரிமை. அதனை யாராலும்

**★ விதுரன் ★**

தடுக்க முடியாது.

ஆனால் வலிந்து தவறான கருத்துக்களைப் பரப்பி, கஷ்ட முறும்போது உதவியைச் செய்து அந்த நன்றிக்கடனுக்காக மதம்மாறும்படி கேட்பது துரோகத்தனமானது - நீதியற்றது - அது ஒரு சமயமாக இருக்க முடியாது. மாறாக ஊழிக்காலத்தில் தோன்றும் மனிதநேயமற்றவர்களின்கூட்டாகவே இருக்க முடியும்

### இனிமேலாவது திருந்தவேண்டும்

இதுவரை பகிரங்க எதிர்ப்புகள் இல்லையென்ற துணிவில் மதம் மாற்றும் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் இனிமேலாவது தமது நடவடிக்கைகளை நிறுத்தி விரும்பி இணைபவர்களை மட்டுமே சேர்த்துக்கொள்வதுடன் சைவ ஆலயங்களுக்கு முன்பாக, தமது சபைக் கூட்டங்களை நடத்துவதையும் தவிர்க்கவேண்டும்.

இதனை இன்று செய்யத் தவறின் இம்மண்ணில் என்றோவொருநாள் மதப்போர் வெடிக்கும் சூழ்நிலை தோன்றும் அதன்பின் சிந்திப்பது கண்கெட்டபின் சூரியநமஸ்காரம் என்பதற்கே ஒப்பானதாகும்.

---

# தோஷங்கள் நீங்கி ஆன்மஈடேற்றம் அடைய சோமவார விரத அனுஷ்டானம் அவசியமே

**இன்று சோமவார விரதத்தையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகிறது. (ஆ-ர்)**

இந்து சமயத்தவர்களின் வாழ்க்கை ஒழுக்கத்திற்கு உறுதுணையாய் அமையும் நெறிகளுள் விரதம் முதன்மையானதாகும். இவ் விரதங்கள் திதி, வார, நட்சத்திரரீதியாக மாதந்தோறும் வகுக்கப்பட்டுள்ளன. —

இவ் விதத்திலே கார்த்திகை மாதம் தனிச் சிறப்புடையதாக விளங்குகின்றது. கார்த்திகை மாதத்திலே வரும் சோமவாரங்களாகிய திங்கட்கிழமைகள் சிவ விரதங்களுள் முக்கியமானவையாக அநுஷ்டிக்கப்படுகின்றன.

மேலும் கார்த்திகை மாதத்தில் வரும் விநாயக சஷ்டி விரதமானது விநாயகரை வணங்கவும், சோமவாரம் சிவ, சக்தியை வழிபடவும், திருக்கார்த்திகை முருகனை வழிபடவும், கார்த்திகைப் பூரணை சர்வாலய தீபதினமும், மற்றைய தெய்வங்கள் யாவரையும் வழிபடவும், வேண்டுதல்செய்யவும், உரியநாட்களாக நம் ஆன்றோரால் வகுக்கப்பட்டுக் கார்த்திகை மாதமே தனிச் சிறப்புடையதாக விளங்குகின்றது.

## நீர்வை மணி

எமது முழுமுதற் கடவுளாகிய சிவனை வழிபட்டு விரதம் நோற்கும் கார்த்திகைச் சோமவார தினத்திலேதான் சந்திரன் தோன்றியதாகவும், இந் நாட்களிலேயே சிவபிரானின் சடாமுடியில் சந்திரன் இடம் பிடித்ததாகவும், அதனாலேயேசந்திரனை சோமன் எனவும் அழைக்கின்றனர்.

### பிரம்மகத்தி தோஷம்:-

அன்றியும் சோமவாரம் எனப்படுவதும் சந்திரனைக் குறித்தேயாகும். இது சிவ சக்தியையும் குறிப்பதாக அமைகின்றது சந்திரன் தன்னைப்பீடித்தகொடிய ரோகம் நீங்க வேண்டிச் சிவபிரானை வழிபட்டே நவக்கிரகங்களுள் இடம்பெற்றனன். இதன் காரணமாக சோமனாகிய சந்திரனும் கார்த்திகைத் திங்களில் சோம விரதம் அனுஷ்டிப்போர்க்கு பிரமஹத்திமுதலிய பல தோஷங்கள் நீங்கவும், சகல பாவங்களும் நீங்கிப் புண்ணிய நற்பேறு கிடைக்கவும் வேண்டுமென சிவ பிரானிடம்வேண்டுதல்செய்தான். சிவனும் சந்திரனின் வேண்டுதற்கு வரமீந்தனன்.

அதனால் இந்த சோமவார விரத நாட்கள் சிவனையும், சக்தியையும், சந்திரனையும் நினைந்து வழிபடும் சிறப்பைப் பெற்றதாகின்றது.

சோமவாரத்தின் தனிச் சிறப்பு இவ்விரதம் அனுஷ்டிப்போர் பகல் உணவருந்தாது, இறை வழிபாடுகள் செய்து இரவு வீடுகளில் விளக்கேற்றியபின் உணவு உட்கொள்ளும் முறையாகும்.

சோமவார விரதத்தை அனுஷ்டித்ததன்மூலம் ஆர்யாவர்த்த அரசனின் மகள் சீமந்தினியும், யாக்ஞவல்லிய முனிவரின்மனைவி மைத்ரேயியும் தமது மாங்கல்யத்தைக் காப்பாற்றியதாகவும், புராணங்கள் கூறுகின்றன.

கார்த்திகைத் திங்களில் வரும் சோமவாரங்களில் நாமும் விரதம் அநுஷ்டித்துச் சிவனைப் பூசித்தால் சகல விதமான நற்பேறுகளையும் பெறலமென்பது சான்றோர் வாக்காகும்.

## பிரபாவின் படங்கள்

மாவீரர் தினத்தையொட்டி வவுனியா நகரின் சில இடங்களில் ''மாவீரர் தினம் 200'' எனக் குறிப்பிடப்பட்டுள்ள சுவரொட்டிகளும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் படம் பொறிக்கப்பட்ட மேலும் பல சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டுள்ளதாக பாதுகாப்புத்தரப்பினர்தெரிவித்துள்ளனர். (வ

# பரீட்சைக்கு தோற்றியோரில் ஐம்பது வீதமான மாணவர்கள்

# பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி!

(கொழும்பு)

கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க.பொ.த.உயர் தர பரீட்சையின் பெறுபேறு களின் அடிப்படையில் பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளில் அரைவாசிப் பேர் பல்கலைக்கழக அனுமதிகளைப்பெறுவதற்கான தகமைகளைப் பெற்றுள்ளனர் என்று பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் நாயகம் ஏ எம் ஆர் டி. அமரக்கோன் தெரிவித்துள்ளார்

பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் நாயகம் மேலும் இது தொடர்பாகத் தகவல் தருகையில்; பொது அறிவு மற்றும் மூன்று பாடங்களுக்கு தோற்றிய மாணவர்களில் 51 ஆயிரம் மாணவர்களும் நான்கு பாடங்களில் தோற்றிய 40 ஆயிரம் மாணவர்களும் பல்கலைக்கழக அனுமதிக்கான புள்ளிகளைப் பெற்றுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

விடைத்தாள்களை மீள்மதிப்பிடுவதற்கான விண்ணப்பங்களை அடுத்த மாதம் 15ம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும் என்றும்; அடுத்த வருடம் வரை 4 பாடங்களுக்கு மாணவர்கள் தோற்ற முடியும் என்றும் அதன்பின்னர் 3 பாடங்களுக்கும் பொது அறிவு வினாப் பத்திரத்திற்கும் மட்டுமே மாணவர்கள் தோற்ற முடியும் என்றும் தெரிவித்தார். (வ)

## ஊழியர் சேமலாபநிதி அறவீட்டு தொகைஅடுத்த ஆண்டு முதல்அதிகரிப்பு

(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதிக்கு ஊழியர்களிடமிருந்தும், வேலை கொள்வோரிடமிருந்தும் அறவிடப்படும் ஊழியர் சேமலாப நிதியின் தொகை அடுத்த ஆண்டுமுதல் அதிகரிக்கப்படவுள்ளதாக தொழில் அமைச்சு அறிவித்துள்ளது

தற்போது ஊழியர் சேமலாப நிதிக்கு வேலை கொள்வோரிடமிருந்து 12 சதவீதமும் ஊழியர்களிடம் இருந்து 8 சதவீதமும் அறவிடப்படுகிறது இத்தொகையை முறையே 15 சதவீதமாகவும், 10 சதவீதமாகவும் அதிகரிக்க தொழில் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதேவேளை ஊழியர் சேமலாப நிதி அதிகரிப்புத் தொடர்பாக பல்வேறு தரப்பினரிடமிருந்தும்கருத்துக்கள் பெறப்படுமென தொழில் அமைச்சர் அலவி மௌலான தெரிவித்துள்ளார். (வ)

### தமிழர்..

மாலைகள் அணிவித்தும் தமது எழுச்சிநிகழ்வுகளை எடுத்துக் காட்டினர்.

வருங்கால சந்ததியினருக்கும், சமுதாயத்திற்கும் வரலாற்றுச் சான்றாக இருக்க வேண்டும் என்பதற்காகவே இந்த வெற்றிக்கற்கள் நாட்டப்பட்டுள்ளன.

இதேவேளை வன்னிப் பெருநிலப் பரப்பில் பரவலாக மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வுகளும் நடைபெற்றுள்ளது.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் 46 வது பிறந்தநாளை முன்னிட்டு தமிழ் மக்கள் இனிப்புப்பண்டங்கள் பரிமாறி தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டார்கள்.

பிரபாகரனின் 46வது பிறந்தநாளை முன்னிட்டு வந்து குவிந்துள்ள வாழ்த்து மடல்களை புலிகளின் குரல் வானொலி தனது விஷேட சிறப்பு ஒலிபரப்பு மூலம் ஒலிபரப்புசெய்துள்ளது. (ப)

### லங்காமுடித்த-

நாளையும் யாழ் புகையிரத நிலையத்தில் வைத்து வழங்கப்படுமென ''றான்'' இணைப்பாளர் எஸ். குகராஜன் தெரிவித்தார்.

லங்கா முடித்தவில் பயணம் செய்தவற்கு பயணச்சீட்டு பெற்றவர்கள் பயண ஆயத்தங்களுடன் நாளை காலை 7 மணிக்கு யாழ். புகையிரத நிலையத்திற்கு வருமாறு யாழ் சிவில் நிர்வாகக் காரியாலயம் மேலும் கேட்டுள்ளது.

இதேவேளை இக்கப்பலில் பயணம் செய்வதற்கு பல்கலைக்கழக மாணவர்கள், வெளிமாவட்டங்களிலிருந்து வந்து திருப்பிச் செல்வோர், அரச அலுவலர்கள் மற்றும் நோயாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமெனவும் தெரியவருகிறது. (ஸ்ரீ)

உ
சிவமயம்

உங்கள் எதிர்பார்ப்பினை பூர்த்தி செய்யும் வண்ணம்

எங்களால் தருவிக்கப்பட்ட இந்தியன்
பெட்சீட் வகைகளும் (100% பருத்தியிலான
60X90) மலிவான விலையில்
விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன

மற்றும்

ஒறிச்சினல் (65 X35] பொலியஸ்ரர்
விலை மீற்றர் 50 - உங்கள் எண்ணம் போலவே
வண்ணவண்ண டிசைன்களில் கண்ணைக்கவரும்
பலவர்ண சாறிகள்,

மற்றும்

வீட்டுப்பாவனைக்குரிய கொட்டின் சாறி
வகைகள், ஸ்கேட் அன் பிளவ்ஸ் வகைகள்
கவுண் வகைகள்

ஆடவர்களுக்கேற்ப விலையுயர்ந்த
தரமான, சேட்டிங், சூட்டிங், ரெடிமெற்
சேட், 7 சேட்வகைகளும், சிறுவர்களுக்கான
பேபிசூட் வகைகளுக்கும்
இன்றே விஜயம் செய்யுங்கள்

த. குமாரசாமி
ரெக்ஸ்ரைல்ஸ்
44, 42, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம,

T.P. 2985 (1954)

# பேராதனையில் பகிஷ்கரிப்பு பல்கலைக்கழகம் உடன் மூடப்பட்டது

(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக்கழக சகல பீட விரிவுரைகளும் நிறுத்தப்பட்டு, பல்கலைக்கழகம் இன்று முதல் கால வரையின்றி மூடப்படுவதாக உபவேந்தர் போராசிரியர் கபிலா குணசேகரா தெரித்துள்ளார்.

பகிடிவதையில் ஈடுபட்ட சிரேஷ்ட மாணவர்கள் பதினெட்டு பேருக்கு பல்கலைக்கழக நிர்வாகம் தலையிட்டு தண்டனை வழங்கியது. இத்தண்டனையைக் குறைக்குமாறு கோரி கலைப்பீட மாணவர்கள் பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்போராட்டம் எல்லையின்றி கட்டுக்கடங்காது நீடித்துச் செல்வதாலேயே மேற்படி பல்கலைக்கழகத்தை மூடுவதற்கு நிர்வாகம் தீர்மானித்தது.

இதேவேளை நேற்று முதல் பல்கலைக்கழக விடுதிகளில் தங்கியுள்ள சகல மாணவர்களையும் வெளியேறும் கடும் உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது (இ)

## நாகம்ஸில் மூவர் கைது

(சுன்னாகம்)

சுன்னாகம் ''நாகம்ஸ்'' திரையரங்கில் நேற்று பிற்பகல் 4மணியளவில் இளைஞர்களிடையே மோதல் சம்பவமொன்று இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவத்தை அடுத்த உடன் ஸ்தலத்திற்கு விரைந்த சுன்னாகம் பொலிஸார் இளைஞர்கள் மூவரை கைது செய்து அழைத்துச் சென்றதாக தெரியவருகிறது.

# கல்விமான்களைத்தந்த பெருமை வட்டு.மத்திய கல்லூரிக்கு உண்டு

## அடிக்கல்நாட்டுவிழாவில் திரிலோகன்உரை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் வலிகாமம் மேற்குப் பகுதியில் கல்விகற்கும் மாணவர்கள் கல்வி வளர்ச்சியில் முன்னணியில் திகழ்வதுடன் சிறந்த முறையில் கல்விகற்று எமது பகுதியைமேலும் அபிவிருத்தி செய்வதற்கு முனைப்புடன் செயலாற்றுகிறார்கள்.

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியில் கடந்த 24ம் திகதி புதிய மனையியல் கூடமொன்றை அமைப்பதற்கான அடிக்கல்லை நாட்டி வைத்து உரையாற்றிய வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தலைவரும், ஈ.பி.டி.பி.யின் வட்டுக்கோட்டை அமைப்பாளருமான ந. திரிலோகநாதன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி பல கல்விமான்களை ஈன்றெடுத்த பெருமைக்குரியது. இதற்குக்காரணம் இப்பாடசாலை அதிபரின் ஊக்கமும், மாணவர்களின் ஒத்துழைப்புமாகும். இப்பகுதிவாழ் மக்களின் ஒத்தாசை மட்டுமன்றி சங்கரத்தை வீரபத்திர, சமேத பத்திரகாளியம்மனின் அருளுமாகும் எனக் குறிப்பிட்டார்.

இதேவேளைபிரார்த்தனை மண்டபம் ஒன்றை அமைப்பதற்கென அவர் இரண்டரை லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (ஸ்ரீ-5)

### இன்ரநெற்மூலம் பரீட்சைமுடிவுகள்

(கொழும்பு)

இலங்கைபரீட்சைதிணைக்களத்தால் வெளியிடப்படும் பரீட்சை முடிவுகளை இன்ரநெற் மூலம் பெற்றுக்கொள்ளலாம் என்று பரீட்சை திணைக்கள ஆணையாளர் நாயகம் ஏ. எம் ஆர்.டி. அமரக்கோன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஆணையாளர் மேலும் தகவல் தருகையில் பரீட்சார்த்திகள சுட்டிலக்கத்தை பதிவுசெய்வதன் மூலம் இந்த பெறுபேறுகளை பெறலாம்.

WWW டொட், EWISL டொட் Com எனபதன் மூலம் இணையத்தினுள நுழையலாம் என்று அவர் தெரிவித்துள்ளார். (வ)

### இன்று ..

1982ம் ஆண்டு சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின் மீதான தாக்குதலின் போது விழுப்புண்ணடைந்து தமிழ் நாட்டில் 82ம் ஆண்டு நவம்பர்மாதம் 27ம் திகதி வீரச்சாவடைந்த முதலாவது போராளி லெப். சத்தியநாதன் [சங்கர்] நினைவுநாளே மாவீரர் தினமாக அனுஷ்டிக்கப்படுகிறது,

மண்மீட்புபோரில் இது வரை சுமார் 15 ஆயிரம் போராளிகள் வீரச்சாவடைந்துள்ளரென்பதும் இங்கு குறிப்பிடத்தககது. (ம

### ரெலே!----

மன்னாருக்கு 10 கிலோ அரிசி மட்டுமே கொண்டு செல்வதற்கு அனுமதிக்கப்படுவதாகவும், இத் தொகையும் அதிகரிக்கபபட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இச் சந்திப்பின் போது வன்னி மக்கள் அனுபவிக்கும் துன்ப துயரங்கள் குறித்தும் எடுத்துக் கூறப்பட்டது.

இதைக் கேட்டு அறிந்து கொண்ட பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா இது குறித்து தான் கவனம் செலுத்துவதாக தெரிவித்தார். (வ)

# வேம்படி மகளிர்கல்லூரி பெறுபேறுகள் சில

கடந்த ஆகஸ்டில் இடம் பெற்ற க.பொ.த. (உ/த) பரீட்சையின் சில முடிவுகள் பாடசாலை ரீதியாக தரப் படுகிறது,

நேற்றைய 'வலம்புரி' பத்திரிகையில் ஏற்கனவே சில பாடசாலை பெறுபேறுகள் வெளியிடப்பட்டது தெரிந்ததே.

உத்தியோகபூர்வ பெறுபேறுகள் இதுவரை வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

| | |
|---|---|
| செல்வி வீ விஜிந்தினி | -3ஏ |
| செல்வி சீ. சிவானுஜா | -3ஏ |
| செல்வி எஸ். அபிராமி | -3பீ |
| செல்வி யீ. அனுஷா | -3பீ |
| செல்வி ரீ. சுஜந்தினி | -3பீ |
| செல்வி ரீ. கஸ்தூரி | -3பீ |
| செல்வி கே. சயந்தி | -3பீ |
| செல்வி ரீ. கௌசிகா | -3பீ |
| செல்வி வீ. தவராசினி | -3பீ |

### பஸ்ஸில்---

ஒன்றில் இருந்தே 10கிலோ எடையுள்ள இந்தச் சக்தி வாய்ந்த குண்டு மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குண்டுவைக்கப்பட்டிருந்த இந்த பஸ் வென்னப்புவ பஸ் டிப்போவில் இருந்து வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. [வ

### ஒருவர்---

மடைந்துள்ளதாக வவுனியா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை இச் சம்பவத்தின் போதுபடையினரால் மீட்கப்பட்ட மூன்று சடலங்கள மன்னார்வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு செஞ்சிலுவைச்சங்கம் ஊடாக புலிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (ம)

### விமான----

இவ்விமானத்தில் பயணம் செய்வதற்கு பயணப் பாதுகாப்பு மற்றும் பயணச்சீட்டு பெற்ற பயணிகள் இன்று காலை 8 மணிக்கு பயண ஆயத்தங்களுடன் யாழ் சிங்கள மகாவித்தியாலத்திற்கு சமுகமளிக்குமாறு யாழ் சிவில் நிர்வாக காரியலயம் மேலும் கேட்டுள்ளது. (ஸ்ரீ)

### வெள்ளவத்தை---

கைது செய்யப்பட்ட 42 பேரில் 10 பேரை யாழ். மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி எம். பி. தி. மகேஸ்வரன் பொலிஸாருடன் தொடர்புகொண்டு விடுவித்துள்ளார். ஏனையோர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டு தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர். (வ)

ஸ்ரீசெல்வா
(யாழ்ப்பாணம்)
சத்தியராஜ்
அருண்பாண்டியன்
ரோஜா,மணிவண்ணன்
நடிப்பில்
புரட்சிக்காரன்
நேரடி CD
10.30—2-30(ப.நேரம்)
[கி-688

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும்விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.